மன்றம்

வார ஏடு — ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ.

மலர் 6—இதழ் 12 ★ 21-7-57 சென்னை ★ விலை 16 காசு

குழலோசை!

குழலோசை வருகிறது!

சண்டைகள் சச்சரவுகள், புகைச்சல்கள் பூசல்கள், அணுக்குண்டுகள் ஆயுதப்பெருக்கங்கள், இவைகளைக் கடந்து குழலோசை வருகிறது!

மலைகள், மாநதிகள், காடுகள் மேடுகள், கடல்கள் அலைகள், கண்டங்கள் நாடுகள், இவைகளைத் தாண்டி குழலோசை வருகிறது!

ஆட்டிப் படைக்கும் ஆதிக்கங்கள், அல்லற்படும் நாடுகள், எல்லைப் பிரச்சினைகள், தொல்லைகள் துயரங்கள் இவைகளை மீறி குழலோசை வருகிறது.

உலகத்தில் ஆணவப்பேச்சுகள் கிளம்பியுள்ளன, அதிகாரக் குரல்கள் கேட்கின்றன, அரசியல் குழப்பங்கள் எழுகின்றன, அடக்குமுறைச் சத்தங்கள் வருகின்றன, இவ்வளவு சத்தங்களையும் அடக்கி, இவைகளை விடப் பெரியதாய், இனிய குழலோசை வருகிறது!

உலகின் நிலையை நினைத்துப் பார்க்கும் பொழுது, அணுக்குண்டு சகாப்தம் ஆரம்பித்து விட்டதாக நமக்குக் கூறப்படுகிறது. எதனுடைய ஆரம்பம்? நல்லதொரு வருங்காலத்திற்கு ஆரம்பமா, அல்லது நாசகாலத்தின் ஆரம்பமா? அணுச்சக்தியை வைத்துக்கொண்டு உலகம் வாழப்போகிறதா, அல்லது போரிட்டு அழியப் போகிறதா? போர் என்றதும் முகம் இருளடைகிறது, கண்களில் துயரம் பரவுகிறது. போருக்குப்பின் எவ்வளவு ஏழ்மை, வறுமை அடிமைத்தனம், ஆற்றமுடியாத வேதனை! மற்றொரு பெரும் போர் ஆகுமோ என்ற கலக்கம் உண்டாகிறது. மனித குலம் அழியுமோ என்ற அச்சம் உண்டாகிறது. இவ்வாறு அச்சப்பட்ட வேதனைப்பட்ட உள்ளத்திற்கு நம்பிக்கையைத்தர குழலோசை கேட்கிறது!

மனித குலம் அழியாது, மனிதத்தன்மை அழியாது என்ற நம்பிக்கையை உண்டாக்குகிறது.

வேதனை சூழ்ந்த உலகில், வெறிச்செயல்கள் மிகுந்த உலகில், மனிதாபிமானம் இன்னும் மறையவில்லை என்பதை அது நினைவூட்டுகிறது. மனிதகுலம் வசதிகள் பெற்று, அமைதியாக, இன்பமாகவாழ முடியாதா என்ற கேள்விக்கு முடியும் என்ற நன்னம்பிக்கையை அந்தக் குழலோசை உண்டாக்குகிறது.

காலை முதல் மாலை வரைக் கடும் வெய்யலில் உழைத்து உடல்சோர்ந்து, உள்ளம் சோர்ந்து, வீடு சேர்பவனின் காதில் இளங் குழவியின் மழலை எப்படி ஆறுதலையும், இன்பத்தையும் வார்க்கிறதோ அவ்வாறு நொந்து போன மனித உள்ளத்தில் குழலோசை ஒருவகை ஆறுதலையும் இனிமையையும் சேர்க்கிறது.

தொழிலின் கரங்கள்.

குழல் வாசிப்பவன் அருகிலில்லை. அவன் பெருநாட்டில் மலையடிவாரத்தில் வாழும் குடியானவச் சிறுவன். அவன் குழல் வாசித்தான்! அந்தக் குழலோசை உலகமெங்கும் சுற்றிவருகிறது. இசை மயத்தில் அல்ல, ஓவியக் காட்சியாக.

* * *

"மானிடர் குடும்பம்" என்ற தலைப்பின், கீழ் புகைப்படக் கண்காட்சி, ஒன்று சென்னைக்கு வந்துள்ளது. நியூயார்க்கில் ஆரம்பிக்கப்பட்ட அந்தக் கண்காட்சி அமெரிக்கா கண்டத்தில் சுற்றி, ஐரோப்பாகண்டத்திலும் காண்பிக்கப்பட்டு, ஆசிய கண்டத்தில் நுழைந்து, இந்தியாவுக்குள் பல இடங்களில் வைக்கப்பட்டு, தற்பொழுது சென்னையில் பல்கலைக் கழகப் பரிட்சை மன்றத்தின் அருகில் வைக்கப்பட்டுள்ளது.

மானிடர் குடும்பம் என்ற தலைப்பின் கீழ் 500க்கு மேற்பட்ட படங்கள் அங்கு வைக்கப்பட்டுள்ளன. பல்வேறு நாட்டு மக்களின் பழக்க வழக்கங்கள் அந்தப் புகைப்படங்களின்மூலம் சித்தரிக்கப்படுகின்றன. ஒவ்வொரு நாளும் காலை முதல் மாலைவரை, ஒவ்வொரு வாழ்விலும் ஆரம்பமுதல் முடிவுவரை இடம் பெறும் பல்வகை நிகழ்ச்சிகள் அந்தக் கண்காட்சியில் தொகுத்துக் காட்டப்படுகின்றன. வெவ்வேறு நாடுகள் காட்டப்படுகின்றன,

(12-ம் பக்கம் பார்க்க)

"மானிடர் குடும்பம்" கண்காட்சியில்:

"தென்னாடு தனிப்பட்ட பகுதி"

'மத்திய அரசாங்கத்தின் செலவுத் திட்டங்கள் வடக்கை வளர்க்கின்றன'

—(0)—

'வடக்கில் பணம் குவிகிறது, தெற்கில் கேடு சூழ்கிறது'

—(0)—

'நான்கு மொழியினரும் ஒன்றுபட்டு, உரிய பங்கைப் பெறவேண்டும்'

—(0)—

பொருளாதார நிபுணர் டாக்டர் தாமஸ் கருத்துரை.

—(0)—

வடக்கு வளர்கிறது, தெற்குத் தேய்கிறது! என்று நாம் கூறியபொழுதெல்லாம் அது வெறும் சொல்லலங்காரம் என்று காங்கிரசுத் தலைவர்கள் தள்ளிவிடப் பார்த்தார்கள். பகற்கனவு என்றார்கள், பலிக்காத காட்டுக் கூச்சல் என்றார்கள். அண்மையில் சட்டசபையில் பேசிய நிதிமந்திரியார், நம்மைப் பற்றி "நாசவேலை"யினர் எனச் சொன்னார்.

ஆனால் வடக்கு, தெற்கு என்ற பேதம், மத்திய அரசாங்கத்தின் கீழ் வடக்கு அதிகச் சலுகைகளைப் பெறுவதும் தெற்கு அதிகமாக அலட்சியப் படுத்தப் படுவதும், ஐந்தாண்டுத் திட்டங்களின்கீழ் வடநாடு தொழில் மய மாகுவதும் தென்னாடு புறக்கணிக்கப்படுவதும் இவைகளைப்பற்றி வரவர தென்னாட்டிலுள்ளவர்கள் ஆங்காங்கு உணரத்தலைப்பட்டுள்ளனர், நம்மை அறியாதவர்கள்கூட, நமது கட்சியைச் சாராதவர்கள்கூட, அவ்வப்பொழுது தென்னாட்டுக்கு நீதிகிடைக்கவில்லை எனப் பேசுகிறார்கள். காங்கிரசுக்காரர்கள் கூட கனம் சுப்பிரமணியம்கூட—தென்னாடு புறக்கணிக்கப்படுகிறது என்று அவர்களையறியாமல் பேசிவிடுகிறார்கள். ஏனென்றால் நாட்டில் உள்ள நிலைமை அது! திராவிட முன்னேற்றக் கழகத்தினர், எதிர்க்கட்சியினர், அவர்கள் கூறுகிறார்கள் என்பதற்காக புறக்கணித்தாலும், புறக்கணிக்கப்பட்ட தென்னாட்டைப் பார்க்கும்பொழுது, நாம் கூறி வருவதை, இன்னும் சில சமயங்களில் ஒருபடி முன்சென்று, வலியுறுத்துகிறார்கள்.

"மத்திய அரசாங்கத்தின் செலவுத்திட்டங்கள் வடக்கில் பணத்தைச் சேர்க்கின்றன. தென்னாட்டுக்குத் தேவையான திட்டங்கள் கிடைக்கவில்லை" என்பதை டாக்டர் பி. ஜே. தாமஸ் என்ற பொருளாதார நிபுணர் சென்னையில் கோகலே மண்டபத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் தெளிவுபட விளக்கியுள்ளார், நம்மைக் குறைகூறியதுபோல, டாக்டர் தாமஸ் பற்றிக் கூறிவிடமுடியாது.

"தென்னாட்டுக்கு உரிய பங்கு கிடைக்கவேண்டும்" என்று நாம் கூறுகிறோம். ஆனால் டாக்டர் தாமஸ் அவர்கள் ஒருபடி மேல்சென்று அதைவிட அதிகமான பங்கு தரப்படவேண்டும் என்று வாதிடுகிறார். வளர்ச்சியுற்ற பகுதிகளிடமிருந்து பணத்தைப் பெற்று, பின்தங்கியுள்ள தென்னாட்டில் செலவிட வேண்டும் என்று அவர் கூறுகிறார்.

டாக்டர் தாமஸ் அவர்கள் சென்னை மாநிலக் கல்லூரியில் பேராசிரியராக இருந்தவர். பின் உலகப் பொது அமைப்பின்கீழ் அமைக்கப்பட்ட பொருளாதாரப் புள்ளிவிவரக் குழுவினர்களில் கலந்து பணியாற்றியிருக்கிறார். அவருடைய பேச்சு கீழே மொழிபெயர்த்துத் தரப்பட்டுள்ளது.

"இந்தியாவின் மற்ற பகுதிகளிலிருந்து வேறுபட்ட அமைப்பு தென்னிந்தியா, அந்த வேறுபாடு மிகத் தெளிவாக உள்ளது. தென்னிந்தியாவிலும் நான்கு மொழிக் குழுவினர்களிடை மிக முக்கியமான ஒற்றுமைகள் இருக்கின்றன. ஒற்றுகொன்றுள்ள முக்கிய தேவைகளில் அவை ஒன்றுபட்டு பிணைக்கப்பட்டுள்ளன. நிர்வாக அமைப்புகளை சிறப்பாகப்பொருளாதாரத்திட்டங்களைப் போடும்பொழுதும், செயலாற்றும் பொழுதும், தென்னாட்டின் நான்கு மாநிலங்களுக்குள்ள நெருங்கிய உறவு முறையை மறந்துவிடக் கூடாது. ஆதலால், தென் மண்டலக்குழு என்ற அமைப்பில், தென்னாட்டின் பெரும் பகுதி தனியாகக் கவனிக்கப் படுவதுஒருவகையில் நல்லதே. மைசூர் மாநிலமும் தென்மண்டலக் குழுவில் சேர்க்கப்பட்டால் இன்னும் நலம் பயக்கும்,

இயற்கை வளங்களையும், நீர் மின்சாரத் திட்டங்களையும்' உணவு நிலைமையையும், தென்னாட்டு மாநிலங்கள் ஒன்றுகூடி ஆராய்வது மகிழ்ச்சிக்குரியதே ஆனால் இந்த மாநிலங்கள் ஒன்றுபட்டு, ஐந்தாண்டுத்திட்டத்தின்கீழ் நமக்குக் கிடைக்க வேண்டிய நியாயமான பங்கைப் பெறவேண்டும். தென் பகுதியில் மக்கள்தொகை அதிகம்; தொழில் வளர்ச்சி மிகக் குறைவு. நமது மத்திய கூட்டு அரசாங்கம் 'மக்களுக்கு நலம் பயப்பதற்காக' இருக்கிறது. அந்தக் குறிக்கோள் உண்மையானால், சக்திக்கு ஏற்ற அளவைப்பெற்று தேவைக்கேற்ற வசதிகளைத் தரவேண்டும் என்பதைச் செயலில் காட்ட வேண்டும். மக்கள் தொகை அதிகமாகக் குவிந்தும் தொழில் துறையில் பின்தங்கியுமுள்ள தென்னாட்டில், இன்னும் அதிகமான அளவு பணத்தை அரசாங்கம் செலவிட வேண்டும். தொழில் துறையில் வளர்ந்துள்ள வடநாட்டு மாநிலங்களிலிருந்து பணத்தைப் பெற்று, பிற்போக்கடைந்துள்ள தென்னாட்டை வளம் பெறச் செய்யவேண்டும். இதுதான் 'சக்திக்கேற்ற அளவைப்பெற்று தேவைக்கேற்ற அளவைத் தந்து' என்ற இலட்சியத்துக்குப் பொருத்தமாயிருக்கும். இந்தியாவில் பல

(11-ம் பக்கம் பார்க்க)

"மானிடர் குடும்பம்" கண்காட்சியில்;

"என்னைக் கண்டுபிடியுங்கள்!"

மன்றம்

ஞாயிறு 21—7—57 சென்னை

★ எதிர்க்கட்சி! ★

ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர்கள் எதிர்க்கட்சிகளைப் பற்றித் தாறுமாருக "விமரிசனம்" செய்யும் கட்டம் ஆரம்பித்துள்ளது.

மக்களாட்சி முறைக்கு, ஆளுங் கட்சிக்கு எதிராக எதிர்க்கட்சி இருப்பது நல்லது என்று முதிர்ந்த அரசியல் வாதிகள் கூறினர்கள். இன்னுஞ் சிலர், பலமான எதிர்க் கட்சி இல்லையென்றும் பலமான எதிர்க்கட்சியை உண்டாக்கும் பொறுப்பை ஆளுங்கட்சி ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கூறினர்கள். திருச்சியில் நடைபெற்ற இரண்டாவது மாநில மாநாட்டில் தேர்தலில் ஈடுபடுவதென திராவிட முன்னேற்றக் கழகம் முடிவு செய்தபொழுது அதை வரவேற்றவர்களில் கனம் காமராசர் அவர்களும் ஒருவர். "இதுவரை திராவிட முன்னேற்றக் கழகம் மறைவாக இருந்தது. இனி நேரிடையாக எதிர்க்கட்சியாகத் தேர்தலில் போட்டியிட வருவது வரவேற்கத்தக்கதே!" என்று அவர் வரவேற்ருர். தேர்தலுக்கு முன்னும் "ஜனநாயகம் பாதுகாக்கப்பட வேண்டுமென்ருல், நல்ல எதிர்க்கட்சி தேவை!" என்று காங்கிரசிலிருப்பவர்கள் ஒப்புக்கொண்டார்கள். "எதிர்க்கட்சிக்குப் போடும் ஓட்டு ஜனநாயகத்துக்குப் போடும் ஓட்டு!" என்று வேறு கொள்கை அடிப்படையில் பெரும் மாற்றத்தை வற்புறுத்தாமல் எதிர்க்கட்சி வேண்டும் என்ற அளவில் மட்டும் காங்கிரசுக்கு எதிராக இருந்தவர்களும் உண்டு.

எதிர்க்கட்சி வருவதுநல்லது, ஜனநாயகத்துக்கு எதிர்க் கட்சி தேவை என்றெல்லாம் பேசப்பட்டவை வெறும் ஜனநாயகத் தத்துவங்களாகிவிட்டன. ஜனநாயகம் நன்ருக தழைக்கவேண்டுமென்ருல், வருகின்ற எதிர்க்கட்சி பலமுள்ளதாக ஆளுங்கட்சி சிறிது தவறினுலும் மறு தேர்தலில் எதிர்க்கட்சி ஆளுங் கட்சியாகிவிடுமோ என்ற அச்சத்தைத் தருமளவுக்குப் பலமுள்ளதாக இருக்கவேண்டும். ஆனல் சென்னை மாநிலத்தில், எதிர்க்கட்சியினர் வரிசையில் நாலைந்து கட்சிகள் இருந்தபோதிலும், அவற்றையெல்லாம் சேர்த்து மூன்று மடங்கு பெரியதாக ஆளுங்கட்சி இருக்கிறது — சட்டசபையில் தற்பொழுதுள்ள எண்ணிக்கைப்படி பார்த்தால்! சட்டசபையில் பார்த்தால், திராவிட முன்னேற்றக்கழகத்தைவிட காங்கிரசுக்கட்சி பத்துமடங்கு பெரிதாக இருக்கிறது.

காங்கிரசுக்கட்சி இங்குமட்டுமல்ல மத்திய அரசாங்கத்திலும் அதிகாரம் வகிக்கிறது. அதுவும் நமக்குத் தெரிகிறது.

நாம் எதிர்த்தாலும், எதிர்க்காவிட்டாலும், ஆதரித்தாலும் ஆதரிக்காவிட்டாலும், காங்கிரசுக்கட்சி கொண்டுவரும் தீர்மானங்கள் நிச்சயமாக நிறைவேறிவிடும். எதிர்க் கட்சிகளைப்பற்றி அவர்கள் கவலைப்படத்தேவையில்லை! காங்கிரசுக் கட்சிக்குள்ள பலம், எதிர்க்கட்சிகளைச் சற்று ஆணவத்துடன் பார்க்குமாறு செய்துள்ளது. "இவர்களால் என்ன செய்யமுடியும்?" என்ற அலட்சியத்தை ஆளுங்கட்சியினர் சிலரிடத்தில் எதிர்க்கட்சிகளைப்பற்றி உண்டாக்கியிருக்கிறது. அந்தப்போக்கு எதிர்க்கட்சிகளைப் பார்த்து பழித்தும் இழித்தும் பேசும்படி ஆளுங் கட்சியின் முக்கிய பேச்சாளர்களைத் தூண்டியுள்ளது. அந்த முறை நல்லது, அல்ல! அவ்வாறு நாம் கூறுவது, நம்மைப்பற்றி அவர்கள் சொல்வதால் வருத்தப்பட்டல்ல! அரசியல் உலகில் இதைவிட அதிகமான—மோசமா இழிச்சொற்களைக் கேட்டுப் பழக்கப்பட்டவர்கள் நாம அவர்கள் நமது கொள்கைகளில் குறைகாண முடியா காரணத்தால், நம்மீது குறைகாணுகிருர்கள்! போகட்டு அவர்களுக்கும் ஏதாவது பேசவேண்டுமே என்று இருந் விடலாம். அவர்களுடைய அலட்சியப்பேச்சு நம்மை பொறுத்து நல்லது அல்ல என்று கூறவில்லை. அத்தகை அலட்சியம் ஜனநாயகத்துக்கு நல்லதல்ல என்று கூறு கிறேம்.

ஜனநாயகம் என்பது பெரும்பான்மை யானவர்க ஆளுவது என்று மட்டும் அர்த்தமல்ல. ஜனநாய முறையில் பெரும்பான்மையாக வந்துவிட்டால் மட்டு போதும், எதிர்க்கட்சிகளால் என்ன செய்யமுடியும் என் எண்ணம் பிறந்தால், கட்சிகள் சட்டசபையில் எதிரெ ராக உட்காருவது என்ற அவசியமே இருக்காது. தேர்த முடிந்ததும், எந்தக் கட்சியினர் அதிகப்படியான வெற் பெற்றிருக்கிருர்களோ அவர்களிடம் ஆட்சிப் பொறுப்பை ஒரு ஐந்தாண்டுக்காலத்துக்கு ஒப்படைத்துவிட்டு, மறுதே தல்வரை மற்றகட்சிகள் பேசாமலிருக்கலாம். சட்டசபை கூடுதல், பேசுதல் போன்ற அனுவசியச் சடங்குகள் தேவையில்லை. ஆளுங்கட்சியினருக்குத்தான் பலம் இரு கிறதே, அவர்கள் கொண்டுவரப்போவதுதான் நிச்சய வெற்றிபெறப்போகிறதே என்ற எண்ணம் உண்டானல் சட்டசபை, கூட்டம், விவாதம் என்பவைகளுக்கு இட மில்லை இட்லர்கூட "இருநூறுபேர் கூடி இருபது நாட்களில் முடிவு செய்வதை ஒருவனுக இருந்து ஒருநல் முடிவு செய்துவிடலாம்!" என்று ஜனநாயக முறையை கேலி செய்தான். எதிர்க்கட்சிகள், எதிர்க்கட்சியினரின் பேச்சு, இவைகளால் என்ன காரியம் ஆகிறது என்று நினைக்க ஆரம்பித்தால், அப்படித்தான் கேலியாகப் பேசத்தோன்றும்.

பெரும்பான்மையானவர்கள் ஆட்சிப்பொறுப்பை ஏற்கவேண்டுமென்பது, ஜனநாயகமுறையில் ஒரு பகுதியே யாகும். முழு அதிகாரத்தையும் பெரும்பான்மைக் கட்சி தனது மனப்போக்கிற்கு ஏற்ப கைப்பற்றத் தீர்மானித் தால் ஜனநாயகம் நிலைபெருது.

ஜனநாயகமென்பது விவாதித்து முடிவுகளை எடுக்கும் ஒரு அரசியலமைப்பு. அதை ஆங்கிலத்தில் Democracy is a government by discussion என்று கூறுவார்கள் எந்தப் பிரச்சினை வந்தாலும், ஆளுங்கட்சியோ அதன் மந்திரிகளோ, தனிப்பட்ட முறையில் முடிவு செய்யாமல் சட்டமன்றத்தில் வைத்து, விவாதித்து முடிவுகளை எடுக்க வேண்டும், பெரும்பான்மையான சமயங்களில் அரசாங்கம் எடுக்கிற—விரும்புகிற முடிவுகளைச் சட்டசபை அப்படியே நிறைவேற்றக்கூடும். அப்படி இருந்தால்கூட சட்டசபையில்குறிப்பிட்டபிரச்சினையைவிவாதத்திற்குவைத்து,மந்திரி சபை அதன்முடிவுகளைப் பெறவேண்டும். நடைபெறும் விவாதங்களில், எதிர்க்கட்சியினர் கலந்துகொண்டு, அரசாங்கத் திட்டங்களில் உள்ள குறைபாடுகளை எடுத்துச் சொல்கிருர்கள். இத்தகைய விவாதங்களில், எதிர்க்கட்சியினர் சுட்டிக்காட்டும் குறைகளுக்கு மந்திரிகள் அவ்வப்பொழுது சமாதானம் தந்துவிடலாம். ஆனல் குறைகளைக் கண்டறிந்து கூற ஒரு எதிர்தரப்பினர் இருக்கிருர்களென்ருல், ஆளுங்கட்சியினர் எவ்வளவுதான் எண்ணிக்கையில் அதிகமானவர்களாக இருந்தாலும், குற்றங்குறைகள் ஏற்படாவண்ணம் பார்த்துக்கொள்ளும் சுபாவம் உண்டாகும். ஏனென்ருல், சட்டசபையில் நடக்கும் விவாதங்கள் அங்குள்ளவர்களால் மட்டுமல்ல, நாட்டுமக்கள் அனைவராலும் கேட்கப்படுகின்றன. எதிர்க்கட்சியினர் இருக்கின்ற காரணத்தால், அரசாங்கத்தில் ஏதேனும் குற்றங்குறைகள் ஏற்பட்டால் மக்களின் கவனம் அங்கு திருப்பப்படுகிறது.

ஜனநாயகமுறையில் விவாதம் முக்கியமானதென்ருல் எதிர்க்கட்சியினரிடமிருந்து வேறு எதை எதிர்பார்க்க முடியும்? விவாதத்தில் அவர்கள் கலந்து கொள்வார்கள், தங்களுடைய கருத்தை முன்வைத்துப் பேசுவார்கள், அதுதான் அவர்களிடமிருந்து எதிர் பார்க்கமுடியும்.

"திராவிடமுன்னேற்றக்கழகத்தார்கள் பேசுகிருர்கள். வேறென்ன செய்கிருர்கள்?" என்று சிலர் கேட்கிருர்கள்.

(10-ம் பக்கம் பார்க்க)

வரவுக்கு மேல் செலவு!

மாநில அரசுகள் போட்டுள்ள நிதித்திட்டங்கள்!

——(0)——

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பாதிக்கும்.

——(0)——

இரண்டாவது ஐந்தாண்டுத் ிட்டத்தை நிறைவேற்றி) வக்கப் புது வரிகளைப் பாட்டு, செலவு போக மிகுதி ிருக்கும் நிதித்திட்டத்தை த்திய அரசாங்க மந்திரி கனம் . டி. கிருஷ்ணமாச்சாரி அவர் ள் போட்டார். அதன் மூலம் டை முறை ஆண்டு 57-58ல் 3 கோடி ரூபாய்க்குப் புது வரி ள் போடப் பட்டன.

புது வரிகளுக்கு முன், மத் ிய அரசாங்கத்தின் 1957-58 ரவு-செலவுத் திட்ட மதிப் ்டில் வரவு 635 கோடி ரூபா ாகவும் செலவு 668 கோடி ரூபா ம் இருந்தன. இதனால் 33 காடி ரூபாய் துண்டு-வரவுக்கு ிறிய செலவு கணக்கில் வந் ்து. அந்தக் குறைவை நீக்க, துவரிகள் 78 கோடி ரூபாய்க் ுப் போடப்பட்டன. அதனால் துண்டுவிழுந்த 33 கோடி ரூபாயும் அடைக்கப்பட்டு, பாக்கி 45 கோடி, ரூபாய் மிகுந்தது. இது தான் மத்திய அரசாங்க வரவு செலவுத் திட்டத்தின் சுருக்கம்.

மத்திய அரசாங்கம் செய் ததைப் போல மாநில அரசாங் கங்களும் செய்யும் — செய்ய வேண்டும் என மத்திய அர சாங்கம் எதிர்பார்த்தது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்ற மத் திய அரசாங்கம் புதுவரி களின் மூலம் தருவதுடன், மாநில அரசாங்கமும் தர வேண்டும் என்று எதிர்பார்க் கப் பட்டது.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை எழுதும் பொழுது. மாநில அரசாங்கங்கள் புதுவரி களின் மூலம் 225 கோடி ரூபாய் தர வேண்டும் என திட்டக் குழுவினர் குறித்து வைத்தார் கள்.

மாநில அரசாங்கங்களும் தமது வரவு-செலவுத் திட்டங்களைச் சரியான முறையில் போடுவார் களென எதிர்பார்ப்பதாக, நிதி மந்திரி கனம் டி. டி. கிருஷ்ண மாச்சாரியார் மத்திய நிதித்திட் டத்தை கொண்டு வரும் பொழுது குறிப்பிட்டார்.

"பாங்குக்குச் செக் கொடுத்து அனுப்புவது, போல, பற்றுக்குறை நிதித் திட்டங்களைப் போட்டு விட்டு, மாநில அரசாங்கங்கள் மத்திய அரசாங்கத்தின் உதவியைக் கேட்கிருர்கள், "இது வரை நாங்கள் அவர்க ளுடைய வேண்டுகோள்களை மதித்திருக்கிரேும், இனி மேலும் மாநில அரசுகள் அப் படியின்றி, பற்றுக்குறை வரவு-செலவுத் திட்டங்களை தவிர்க்க வேண்டும்" என்று பிரதமர் பண்டித நேரு காங்கிரசு கமிட் டிக் கூட்டத்தில் மாநில அர சாங்க நிதி மந்திரிகளுக்குக் கடு மையாக எச்சரித்தார்.

திட்டக் குழுவினர் எதிர் பார்த்தது, மத்திய நிதிமந்திரி கேட்டுக்கொண்டது, பிரதம மந்திரி எச்சரித்தது எதுவும் மாநில நிதி மந்திரிகளை அச் சுறுத்தியதாகத் தெரியவில்லை. இது வரை 12 மாநிலங்கள் 1957-58 வரவு செலவுத் திட் டங்களைப் போட்டுவிட்டன. பாக்கியிருப்பது உத்திரப்பிர தேசம் ஒன்றுதான். அதுவும் புதுவரிகளைப் போட்டு, மிகுதி காட்டும் திட்டத்தை உண்டாக் கும் என்று எதிர்பார்ப்பதற் கில்லை.

இதுவரை 1957-58 வரவு செலவுத்திட்டத்தைப் போட்ட 12 மாநிலங்களில், கேரளம் ஒன் றைத் தவிர மற்றவைகளி லெல்லாம், வரவுக்கு மீறிய செலவுத்திட்டங்களே போடப் பட்டுள்ளன. அவைகளுடைய வரவுசெலவுத் திட்டங்களைப் பார்க்கலாம்.

1957 – 58 மாநில வரவு - செலவுத் திட்டங்கள்.

., எண்	மாநிலம்.	வருமானம்.	செலவு.	துண்டு விழுவது.	புது வரிகள்.
1.	பீகார்.	44 கோடி 81 லட்சம்.	69 கோடி 78 லட்சம்.	24 கோடி 97 லட்சம்.	1 கோடி 75 லட்சம்.
2.	மேற்கு வங்காளம்.	61 ,, 89 ,,	72 ,, 18 ,,	10 ,, 29 ,,	இல்லை.
3.	மைசூர்	50 ,, 93 ,,	60 ,, 29 ,,	9 ,, 36 ,,	இல்லை.
4.	ஆந்திரம்	53 ,, 14 ,,	58 ,, 62 ,,	5 ,, 48 ,,	இல்லை,
5.	சென்னை	56 ,, 49 ,,	61 ,, 32 ,,	4 ,, 83 ,,	1 கோடி 25 லட்சம்.
6.	அசாம்	24 ,, 29 ,,	28 ,, 89 ,,	4 ,, 60 ,,	இல்லை.
7.	மத்தியப்பிரதேசம்	50 ,, 89 ,,	54 ,, 37 ,,	3 ,, 48 ,,	இல்லை.
8.	ஒரிசா	21 ,, 89 ,,	25 ,, 7 ,,	3 ,, 18 ,,	இல்லை.
9.	பம்பாய்	109 ,, 44 ,,	112 ,, 61 ,,	3 ,, 17 ,,	இல்லை.
10.	இராசபுதனம்	29 ,, 38 ,,	32 ,, 19 ,,	2 ,, 81 ,,	1 கோடி 5 லட்சம்.
11.	பஞ்சாப்	40 ,, 49 ,,	43 ,, 29 ,,	2 ,, 80 ,,	1 கோடி 6 லட்சம்,
12.	கேரளம்	27 ,, 90 ,,	30 ,, 15 ,,	2 ,, 25 ,,	2 கோடி 32 லட்சம்,
		571 ,, 54 ,,	648 ,, 76 ,,	77 ,, 22 ,,	

வரவுக்கு மீறிய செலவுத் திட் ங்களை ஒன்று தவிர்த்த ல்லா மாநிலங்களும் போட் ள்ளன. மத்திய அரசாங்கத் தைப் பின்தொடர்ந்து அவை ள் செலவைவிட வரவைக் ாண்பித்து ஐந்தாண்டுத்திட் த்துக்கு அவை நிதிதரும்நிலை ில் இல்லை. வேடிக்கை என்ன வென்ருல், மத்திய அரசாங்கத் தைப்போல வரவை அதிகரித் துக்கொண்ட மாநில அரசு கேரளம் ஒன்றுதான். அங்கு ாங்கிரசல்லாத மந்திரிசபை! ஆனால் காங்கிரசு மந்திரிசபை உள்ள மற்ற மாநிலங்கள் வர வுக்கு மீறிய செலவை ஈடுகட்ட எதுவும் செய்யவில்லை. சென்னை, பீகார், இராசச் தானம், பஞ்சாப், இவைகள் ரளவு, ஒன்றே முக்கால்கோடி ஒன்றேகால் கோடி என்று புது வரிகளினுல் அதிகமான வருமானத்தைத் தேடி இருக்கின் றன. மற்றமாநிலங்களில் மிகுதி யாகும் செலவுக்கு வழிவகை கள் செய்யப்படவில்லை.

1957–58ல் புதுவரிகளினுல் 78கோடி ரூபாய்களைச் சேர்க்க முடியுமென மத்திய அரசாங்கம் எதிர்பார்த்தது. ஆனல் மாநில அரசாங்கங்களில் 70 கோடி ரூபாய்களுக்கு மேல் வரவுக்குமேல் செலவு காட்டப் பட்டுள்ளது.

மாநில அரசாங்கங்கள் புது வரிகள் போடாததற்கு ஒரு முக்கியமான காரணம், மத்திய அரசாங்கங்கள் போட்ட கடுமையான வரிகள்தாம்! அத் துடன் மத்திய அரசாங்கத் தின் வரி உயர்வுக்கு ஏற்பட்ட அதிகமான எதிர்ப்பைப் பார்த் ததும், மேலும் புதுவரிகளைப் போட மாநில அரசாங்கங்களுக் குப் பிரியமில்லை. அசாம் மாநில நிதி மந்திரி இதைப்பற்றி வெளிப்படையாகவே "மத்திய அரசாங்கத்தின் வரிகள் மத் தியதர வகுப்பினர்மீதும் ஏழை கள்மீதும் அதிகமான பாரத் தைப் போட்டிருப்பதால் மாநில அரசாங்கம் புதுவரி களைப் போடவில்லை" என்று தெரிவித்தார்.

ஆக இந்திய அரசாங்கம் மாநில அரசாங்கத்திடம் ஐந் தாண்டுத்திட்டத்துக்கு 225 கோடி ரூபாய்களை எதிர்பார்த் தது போய், இப்பொழுது மாநி லங்கள் போட்டுள்ள பற்றுக் குறை நிதித்திட்டங்களில் ஏற் படும் அதிகச் செலவுக்கு வழி சொல்லியாகவேண்டும்.

மாநில அரசாங்கத்திடம் 225 கோடி ரூபாய்களை எதிர்பார்த் ததுகூட, திட்டத்தின் மொத்த அளவு 4800 கோடி ரூபாயாக இருந்தபொழுது. ஆனல் இப் பொழுது 4800 கோடியாக இருந்த திட்டம் 5500 கோடி யாகி, 6000 கோடிக்குப் போய் விடும் போலிருக்கிறது. ஆக மாநில அரசாங்கங்கள் இன் னும் அதிகமான அளவு பணத் தைத் தேடிக்கொடுக்கவேண்டி யிருக்கும். ஆனல் முதலில் எதிர்பார்த்த 225கோடி ரூபாய் களே கிடைக்குமா என்பது சந் தேகம்! மேற்கொண்டு உயர்ந் துள்ள தொகையை எப்படிப் பெறப் போகிருர்களென்பது தெரியவில்லை.

திட்டத்தைப் போடும் பொழுது, இந்தவகையில் 400 கோடி, அந்தவகையில் 800 கோடி என்று 4800 கோடிக்குக் கணக்குகளைப்போட்டு வைத்

(9-ம் பக்கம் பார்க்க)

வரவுக்கு மேல் செலவு!

——(0)—— [illegible]

மாநில அரசுகள் போட்டுள்ள நிதித்திட்டங்கள்!

——(0)——

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பாதிக்கும்.

——(0)——

இரண்டாவது ஐந்தாண்டுத் ிட்டத்தை நிறைவேற்றி வக்கப் புது வரிகளைப் பாட்டு, செலவு போக மிகுதி ிருக்கும் நிதித்திட்டத்தை த்திய அரசாங்க மந்திரி கனம் . டி. கிருஷ்ணமாச்சாரி அவர் ள் போட்டார். அதன் மூலம் டை முறை ஆண்டு 57-58ல் 8 கோடி ரூபாய்க்குப் புது வரி ள் போடப் பட்டன.

புது வரிகளுக்கு முன், மத் ிய அரசாங்கத்தின் 1957-58 ரவு-செலவுத் திட்ட மதிப் ீட்டில் வரவு 635 கோடி ரூபா ாகவும் செலவு 668கோடி ரூபா ம் இருந்தன. இதனால் 33 காடி ரூபாய் துண்டு-வரவுக்கு ீறிய செலவு கணக்கில் வந் து. அந்தக் குறைவை நீக்க, துவரிகள் 78 கோடி ரூபாய்க் குப் போடப்பட்டன. அதனால் துண்டுவிழுந்த 33 கோடி ரூபா யும் அடைக்கப்பட்டு, பாக்கி 45 கோடி, ரூபாய் மிகுந்தது. இது தான் மத்திய அரசாங்க வரவு செலவுத் திட்டத்தின் சுருக்கம்.

மத்திய அரசாங்கம் செய் ததைப் போல மாநில அரசாங் கங்களும் செய்யும் — செய்ய வேண்டும் என மத்திய அர சாங்கம் எதிர்பார்த்தது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்ற மத் திய அரசாங்கம் புதுவரி களின் மூலம் தருவதுடன், மாநில அரசாங்கமும் தர வேண்டும் என்று எதிர்பார்க் கப் பட்டது.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை எழுதும் பொழுது. மாநில அரசாங்கங்கள் புதுவரி களின் மூலம் 225 கோடி ரூபாய் தர வேண்டும் என திட்டக் குழுவினர் குறித்து வைத்தார் கள்.

மாநில அரசாங்கங்களும் தமது வரவு-செலவுத் திட்டங்களைச் சரியான முறையில் போடுவார் களென எதிர்பார்ப்பதாக, நிதி மந்திரி கனம் டி. டி. கிருஷ்ண மாச்சாரியார் மத்திய நிதித்திட் டத்தை கொண்டு வரும் பொழுது குறிப்பிட்டார்.

"பாங்குக்குச் செக் கொடுத்து அனுப்புவது, போல, பற்றுக்குறை நிதித் திட்டங்களைப் போட்டு விட்டு, மாநில அரசாங்கங்கள் மத்திய அரசாங்கத்தின் உதவியைக் கேட்கிறார்கள், "இது வரை நாங்கள் அவர்க ளுடைய வேண்டுகோள்களை மதித்திருக்கிறோம், இனி மேலும் மாநில அரசுகள் அப் படியின்றி, பற்றுக்குறை வரவு-செலவுத் திட்டங்களை தவிர்க்க வேண்டும்" என்று பிரதமர் பண்டித நேரு காங்கிரசு கமிட் டிக் கூட்டத்தில் மாநில அர சாங்க நிதி மந்திரிகளுக்குக் கடு மையாக எச்சரித்தார்.

திட்டக் குழுவினர் எதிர் பார்த்தது, மத்திய நிதிமந்திரி கேட்டுக்கொண்டது, பிரதம மந்திரி எச்சரித்தது எதுவும் மாநில நிதி மந்திரிகளை அச் சுறுத்தியதாகத் தெரியவில்லை. இதுவரை 12 மாநிலங்கள் 1957-58 வரவு செலவுத் திட் டங்களைப் போட்டுவிட்டன. பாக்கியிருப்பது உத்திரப்பிர தேசம் ஒன்றுதான். அதுவும் புதுவரிகளைப் போட்டு, மிகுதி காட்டும் திட்டத்தை உண்டாக் கும் என்று எதிர்பார்ப்பதற் கில்லை.

இதுவரை 1957-58 வரவு செலவுத்திட்டத்தைப் போட்ட 12 மாநிலங்களில், கேரளம் ஒன் றைத் தவிர மற்றவைகளி லெல்லாம், வரவுக்கு மீறிய செலவுத்திட்டங்களே போடப் பட்டுள்ளன. அவைகளுடைய வரவுசெலவுத் திட்டங்களைப் பார்க்கலாம்.

1957 – 58 மாநில வரவு - செலவுத் திட்டங்கள்.

எண்	மாநிலம்.	வருமானம்.	செலவு.	துண்டு விழுவது.	புது வரிகள்.
1.	பீகார்.	44 கோடி 81 லட்சம்.	69 கோடி 78 லட்சம்.	24 கோடி 97 லட்சம்.	1 கோடி 75 லட்சம்.
2.	மேற்கு வங்காளம்.	61 ,, 89 ,,	72 ,, 18 ,,	10 ,, 29 ,,	இல்லை.
3.	மைசூர்	50 ,, 93 ,,	60 ,, 29 ,,	9 ,, 36 ,,	இல்லை.
4.	ஆந்திரம்	53 ,, 14 ,,	58 ,, 62 ,,	5 ,, 48 ,,	இல்லை.
5.	சென்னை	56 ,, 49 ,,	61 ,, 32 ,,	4 ,, 83 ,,	1 கோடி 25 லட்சம்.
6.	அசாம்	24 ,, 29 ,,	28 ,, 89 ,,	4 ,, 60 ,,	இல்லை.
7.	மத்தியப்பிரதேசம்	50 ,, 89 ,,	54 ,, 37 ,,	3 ,, 48 ,,	இல்லை.
8.	ஒரிசா	21 ,, 89 ,,	25 ,, 7 ,,	3 ,, 18 ,,	இல்லை.
9.	பம்பாய்	109 ,, 44 ,,	112 ,, 61 ,,	3 ,, 17 ,,	இல்லை.
10.	இராசபுதனம்	29 ,, 38 ,,	32 ,, 19 ,,	2 ,, 81 ,,	1 கோடி 5 லட்சம்.
11.	பஞ்சாப்	40 ,, 49 ,,	43 ,, 29 ,,	2 ,, 80 ,,	1 கோடி 6 லட்சம்,
12.	கேரளம்	27 ,, 90 ,,	30 ,, 15 ,,	2 ,, 25 ,,	2 கோடி 32 லட்சம்,
		571 ,, 54 ,,	648 ,, 76 ,,	77 ,, 22 ,,	

வரவுக்கு மீறிய செலவுத் திட் டங்களை ஒன்று தவிர்த்த ல்லா மாநிலங்களும் போட் டுள்ளன. மத்திய அரசாங்கத் தைப் பின்தொடர்ந்து அவை ள் செலவைவிட வரவைக் காண்பித்து ஐந்தாண்டுத்திட் டத்துக்கு அவை நிதிதரும்நிலை யில் இல்லை. வேடிக்கை என்ன வென்றால், மத்திய அரசாங்கத் தைப்போல வரவை அதிகரித் துக்கொண்ட மாநில அரசு கேரளம் ஒன்றுதான். அங்கு காங்கிரசல்லாத மந்திரிசபை! ஆனால் காங்கிரசு மந்திரிசபை உள்ள மற்ற மாநிலங்கள் வர வுக்கு மீறிய செலவை ஈடுகட்ட எதுவும் செய்யவில்லை. சென்னை, பீகார், இராசச் தானம், பஞ்சாப், இவைகள் ஏராளவு, ஒன்றே முக்கால்கோடி ஒன்றேகால் கோடி என்று புது வரிகளினால் அதிகமான வரு மானத்தைத் தேடி இருக்கின் றன. மற்றமாநிலங்களில் மிகுதி யாகும் செலவுக்கு வழிவகை கள் செய்யப்படவில்லை.

1957–58ல் புதுவரிகளினால் 78கோடி ரூபாய்களைச் சேர்க்க முடியுமென மத்திய அரசாங்கம் எதிர்பார்த்தது. ஆனால் மாநில அரசாங்கங்களில் 70 கோடி ரூபாய்களுக்கு மேல் வரவுக்குமேல் செலவு காட்டப் பட்டுள்ளது.

மாநில அரசாங்கங்கள் புது வரிகள் போடாததற்கு ஒரு முக்கியமான காரணம், மத்திய அரசாங்கங்கள் போட்ட கடுமையான வரிகள்தாம்! அத் துடன் மத்திய அரசாங்கத் தின் வரி உயர்வுக்கு ஏற்பட்ட அதிகமான எதிர்ப்பைப் பார்த் ததும், மேலும் புதுவரிகளைப் போட மாநில அரசாங்கங்களுக் குப் பிரியமில்லை. அசாம் மாநில நிதிமந்திரி இதைப்பற்றி வெளிப்படையாகவே "மத்திய அரசாங்கத்தின் வரிகள் மத் தியதர வகுப்பினர்மீதும் ஏழை கள்மீதும் அதிகமான பாரத் தைப் போட்டிருப்பதால் மாநில அரசாங்கம் புதுவரி களைப் போடவில்லை" என்று தெரிவித்தார்.

ஆக இந்திய அரசாங்கம் மாநில அரசாங்கத்திடம் ஐந் தாண்டுத்திட்டத்துக்கு 225 கோடி ரூபாய்களை எதிர்பார்த் தது போய், இப்பொழுது மாநி லங்கள் போட்டுள்ள பற்றுக் குறை நிதித்திட்டங்களில் ஏற் படும் அதிகச் செலவுக்கு வழி சொல்லியாகவேண்டும்.

மாநில அரசாங்கத்திடம் 225 கோடி ரூபாய்களை எதிர்பார்த் ததுகூட, திட்டத்தின் மொத்த அளவு 4800 கோடி ரூபாயாக இருந்தபொழுது. ஆனால் இப் பொழுது 4800 கோடியாக இருந்த திட்டம் 5500 கோடி யாகி, 6000 கோடிக்குப் போய் விடும் போலிருக்கிறது. ஆக மாநில அரசாங்கங்கள் இன் னும் அதிகமான அளவு பணத் தைத் தேடிக்கொடுக்கவேண்டி யிருக்கும். ஆனால் முதலில் எதிர்பார்த்த 225கோடி ரூபாய் களே கிடைக்குமா என்பது சந் தேகம்! மேற்கொண்டு உயர்ந் துள்ள தொகையை எப்படிப் பெறப் போகிறார்களென்பது தெரியவில்லை.

திட்டத்தைப் போடும் பொழுது, இந்தவகையில் 400 கோடி, அந்தவகையில் 800 கோடி என்று 4800 கோடிக்குக் கணக்குகளைப்போட்டு வைத்

(9–ம் பக்கம் பார்க்க)

அண்ணாமலை எங்கள் வீட்டுக்குப் பக்கத்தில் இருந்தார். அந்த ஊர் பள்ளிக்கூடத்தில் "டிரில் மாஸ்டர்" "டிராயிங் மாஸ்டர்" இரண்டு வேலைகளையும் அவர் பார்த்தார். ஆறுவது வரை அவர் இருந்த பள்ளிக் கூடத்தில் நான் படித்திருக்கிறேன். "வாத்தியார்" என்ற அளவில் அவரைப் பற்றி அப்பொழுதெல்லாம் பயம் உண்டு. என் அப்பா இறந்ததும், கடைவியாபாரத்தைக் கவனிக்க நான் பள்ளிக் கூடத்தை விட வேண்டியதாயிற்று. அப்பொழுது அதைப் பற்றி வருத்தப்படவில்லை. பள்ளிக்கூடத்தில் போய் கஷ்டப் படுவதை விட, கடையில் உட்கார்ந்து காசு வாங்கிப் போடுவதில் உற்சாகம் இருந்தது. நான் பள்ளிக்கூடத்தை விட்டுக் கடையில் உட்கார்ந்ததும், அண்ணாமலை வாத்தியார், கடைக்கு அடிக்கடி வருவார், உட்கார்ந்து பேசியிருந்துவிட்டுப் போவார்.

முதலில் அண்ணாமலையைப் பார்ப்பவர்கள், அவரைப் பற்றிக் கேலியாகத்தான் நினைப்பார்கள், பழுப்படைந்த வேட்டி கழுத்து வரைப் பொத்தான் போடப்பட்ட நீண்ட கோட், தலையில் ஒரு குல்லாய், காலில் ஒட்டுகள் போடப்பட்ட செருப்பு, இவைகளுடன் அவர் வருவதைப் பார்த்தால் வேடிக்கையாகத் தானிருக்கும். ஆடை அலங்கோல மாயிருந்த போதிலும், நடை முருக்காக இருக்கும் பட்டாளத்தில் பவனிவருவது போல, நடந்து வருவார். அவரது கோட்டுக்கும் குல்லாய்க்கும் மெதுவாகப் போகும் தளர்ந்த நடை தான் சரியாக இருக்கும். ஆனால் பள்ளிக்கூடத்து "டிரில் மாஸ்டர்" என்ற நினைப்பில், மிடுக்குடன நடப்பார்! பள்ளிக்கூடத்தில் அவருக்கு அதிகச் சம்பளம் கிடையாது. நாற்பது ரூபாய் தான் கொடுத்தார்கள். உயர் நிலைப் பள்ளியாக இருந்த போதிலும் பையன்கள் குறைவாகவே இருந்தார்கள். அந்த ஊரில் இருந்த மக்கள் தொகையையும் படிக்கக் கூடியவர்கள் எண்ணிக்கையையும் பார்த்தால், அந்த ஊருக்கு அவ்வளவு பெரிய பள்ளிக்கூடம் தேவையில்லை. ஆனால் அந்த ஊரிலிருந்த ஜமின்தார் மகுடபதி அவர்கள் ஜில்லா போர்டு தலைவராக இருந்ததால், அந்தப் பள்ளிக்கூடம் வந்தது. பள்ளிக்கூடத்தில் சம்பளம் குறைவாக இருந்ததால், அண்ணாமலை போர்டுகள் எழுதுவது, வர்ண வேலைகள் செய்வது இவைகளில் சிறிது சம்பாதித்தார். அவருக்கு நான்கு பையன்களும், மூன்று பெண்களும் இருந்தார்கள். மேற்கொண்டு வரும் வருவாயைக் கொண்டு தான் குடும்பத்தைச் சமாளிக்க வேண்டியிருந்தது. சிறிய ஊராக இருந்ததால், போர்டு எழுதித் தொங்க விடக்கூடிய அவசியத்தில் மிகச் சிலர்தான் இருந்தார்கள். அவருக்கு ஏதாவது வேலை கொடுக்கவேண்டுமென்ற எண்ணத்தில், நான் மட்டும் என் கடைக்கு முன்னிருக்கும் பலகையை அடிக்கடி எழுதச் சொல்வேன்.

வேலையில் அண்ணாமலை ஆமை வேகந்தான்! என்ன வர்ணம் குழைக்கலாம், எந்த அளவுக்கு எழுத்து எழுதலாம் என்று இரண்டுநாள் யோசிப்பார். முதலில் ஒரு மாதிரி எழுதிக் காட்டி "எப்படியிருக்கிறது?" என்று கேட்பார்.

இரா.செழியன்

"நன்றாயிருக்கிறது!" என்பேன்.

"இல்லை, நன்றாக இல்லை. இந்த வர்ணத்துக்கு அந்த எழுத்து எடுப்பாக இல்லை!" என்று எல்லாவற்றையும் அழித்து மாற்றிவிடுவார். இப்படி ஒரு பலகை எழுதித்தர ஒருவாரமாகிவிடும். விளம்பரப் பலகையில் ஏதாவது பொம்மை வந்துவிட்டால் போதும், சிறிது சிறிதாக உருவத்தைப் போடுவார், ஒரு நாளைக்குக் கண் இமையை மாத்திரம் போட்டுவிட்டு அதையே பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருப்பார். அடுத்த நாள் கன்னத்துக்குக் கொஞ்சம் சிகப்புத் தீட்டிவிட்டு, பார்ப்பார். இவ்வளவுக்கும் அந்த விளம்பரப்பலகை ஏதாவது ஒரு ஒற்றைக் கடைக்குமேல் கட்டவேண்டியதாயிருக்கும்.

அண்ணாமலை எழுதிக்கொண்டிருக்கும்போது, யாரும் பக்கத்தில் போகமுடியாது. அவ்வளவு ஆர்வத்துடன் அதில் அமிழ்ந்துகிடப்பார். வீட்டில் இருக்கும் பிள்ளைகளெல்லாம் பக்கத்தில் தயாராகக் காத்திருப்பார்கள். அவர் ஏதாவது கேட்டு உடனே வராவிட்டால், கோபம் வந்துவிடும். பக்கத்திலிருப்பவைகளைப் போட்டு உடைத்து, சத்தம் போடுவார். வேலை வந்தால் இவ்வளவு அமளி செய்பவர் வேலையில்லாமலும்சும்மா இருக்கமாட்டார்! ஒன்றும் கிடைக்காமல், என் கடையில் உட்கார்ந்திருக்கும் பொழுது, "நல்ல எண்ணெய் கிடைக்கும்" பேதி மாத்திரை விலை அரையணா" என்று கையால் எழுதப்பட்டதை எடுத்து வேறு அட்டையில் அழகாக எழுதித் தருவார்.

ஓவியத்தில் உள்ளபடியே அவருக்கு நல்ல பற்றுதல் இருந்தது. அதைப்பற்றி, ஓவியக் கலையில் யார்யார் எப்படி வரைந்தார்கள் என்று கதை சொல்லிக் கொண்டிருப்பார், எனக்கு ஒன்றும் புரிவதில்லை. கடை வேலையைப் பார்த்துக் கொண்டே அவர் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருப்பேன். கடையில் ஏதாவது நல்லக் காலண்டர், பழைய பத்திரிக்கைப் படங்கள் இவைகளை அவர் எடுத்துப் போவார் மறுநாள் அதே மாதிரி ஒரு படத்தை வரைந்து எடுத்து வந்து காட்டுவார். அவர். காட்டும் பொழுது, ஒப்புக்கு "நன்றாக இருக்கிறதே" என்று வாங்கி வைப்பேன். பின் ஏதாவது சூடன் சாம்பிராணி மடிக்க அந்தக் காகிதம் போய்விடும். அவர் போட்ட படங்கள் நன்றாகத் தானிருந்தன, அந்தப் படங்களை வைத்துக் கொண்டு என்ன செய்யப் போகிறோம்!

எங்கேயாவது பெரிய மனிதர்கள் வீடு கட்டி முடித்து, "கிரகப் பிரவேசம்" செய்வதாக இருந்தால், அண்ணாமலை வாத்தியார் அங்கு போய், முன் பக்கத்து சுவர்களில்மயில் மான் படங்கள் போட்டு பணம் வாங்கி வருவார். கல்யாண வீடுகளில் நன்றாக அலங்காரம் செய்ய அவரை அழைப்பார்கள். அப்படி இப்படி ஏதாவது ஒரு வேலை அவருக்கும் கிடைத்துக்கொண்டிருந்தது.

எங்களூர் ஜமின்தார் நான்காவது தடவையாக ஜில்லா போர்டு தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதற்கு ஒரு உபசாரம் நடத்துவதென்று ஊரார்கள் ஒன்றுகூடி முடிவு செய்தோம். அதற்குப் பிறகு, எங்கள் ஊருக்குப் பெருமைதரும் ஜமின்தாரைக் கௌரவிக்க நிலையான ஒன்று இருக்கவேண்டுமென்று தோன்றியது. "பூங்காவனம் ஏற்படுத்தி, அதற்கு ஜமின்தார் பெயரை வைக்கலாம்" என்று ஒருவர் சொன்னார். பட்டணத்தில் அதுபோலப் பூங்காவனத்துக்குப் பெயர் வைப்பதைக் கேள்விப் பட்டிருக்கிறோம்.

"பட்டணத்தில் பூங்காவனம் இருப்பது சரி. இந்த ஊருக்கு அதனால் என்ன பலன்? ஊர் நிறைய மரமும் செடியும் இருக்கிறது. பூங்காவனம் வைத்தால் யார் வருவார்கள்" என்று மற்றொருவர் தடை சொன்னார். அதுவும் நியாயமாகப்பட்டது.

"கடைத்தெருவுக்கு 'ஜமின்தார் மகுடபதி தெரு' என்று பெயரிடலாம்" என்று ஒரு யோசனை வந்தது. எங்களூரில் அது ஒன்றுதான், தெருஎன்ற அளவில் ஒழுங்காக இருந்தது.

"என்ன பெயர் வைத்தாலும், கடைத்தெருவைக்கடைத் தெரு என்று ஊரார் சொல்வார்களே தவிர, ஜமின்தார் மகுடபதித் தேருவுக்குப் போய் சர்க்கரை ஒருவிசை வாங்கிவா என்று யாரும் சொல்லமாட்டார்கள்." என்று என் பக்கத்திலிருந்த எண்ணெய்க்கடைக்காரர் சொன்னார். அத்துடன் தெருப்பெயர் வைப்பது கைவிடப்பட்டது.

கடைசியாக ஊர்க் கணக்கப் பிள்ளை, "புதிதாகக் கட்டும் பஞ்சாயத்துப் போர்டு கட்டடத்துக்கு ஜமின்தார் பெயரை வைக்கலாம்." என்று ஆரம்பித்தார். அந்த யோசனை சரியாகப்பட்டது.

"அத்துடன், ஜமின்தாரின் படம் ஒன்றை அந்தக் கட்டிடத்துக்குள் வைக்கலாம்." என்று பஞ்சாயத்து போர்டு தலைவர் சொன்னார்.

"கலெக்டர் துரையை வரவழைத்து, அந்தப் படத்தைத் திறக்கலாம்!" என்று பட்டாமணியம் திறப்பு விழாவின் முக்கியத்துவத்தைப் பற்றிப் பேசினார். ஒரு நல்ல யோசனை வந்தால், அதைத் தொடர்ந்து பல நல்ல யோசனைகள் வரும். அது போல, ஒன்றன்பின் ஒன்றாக வந்த அந்த யோசனைகள் எல்லாம் ஏற்கப்பட்டன.

அந்த ஏற்பாடுகளைச் செய்து முடிக்க, கடைக்காரர்களுக்கு தலைக்கு பத்துரூபாயும், வசதியுள்ளவர்கள் இன்னும் கூடுதலாகவும் மற்றவர்கள் இரண்டோ, மூன்றோ கொடுக்க வேண்டும் என்றும் ஏற்பாடானது. பணத்தை வசூல் செய்யும் பொறுப்பை நான் ஏற்றுக்கொண்டேன்.

கடைசியாக ஜமின்தாரின் படத்தை எப்படி எழுதுவது என்ற கேள்வி வந்தது. போட்டோ பிடிக்கும் முறை அப்பொழுது வந்துவிட்டது. ஆனால் போட்டோ பிடித்துக் கொண்டால் ஆயுள் குறை... என்ற பயம் இருந்தது. ... தால் போட்டோ பிடிப்ப...

களே தவிர, உயிரோடிருப்பவர்கள் யாரும் போட்டோ பிடித்துக் கொள்வதில்லை. ஆக யாரிடமாவது சொல்லி, ஜமீன்தார் படத்தை எழுதச் செய்யவேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது, யாரிடம் எழுதக் கொடுப்பது என்ற கேள்வி எழுந்தது.

"அண்ணாமலை வாத்தியாரிடம் கொடுக்கலாம்." என்று நான் சொன்னேன்,

அதைக் கேட்டுச் சிலர் சிரித்தார்கள். "படம் நன்றாக இருக்கவேண்டும். யாராவது பட்டணத்துக்குப்போய் எழுதி வாங்கி வரவேண்டும்" என்று பட்டணத்தில் மருமகப்பிள்ளையுடைய ஒருவர் சொன்னார். இந்தசாக்கில் பட்டணத்துக்கு போய் வரலாமென்று அவர் நினைத்தார்.

"பட்டணம் எல்லாம் செலவு அதிகமாகும். நமக்கு நூற்றைம்பது அல்லது இருநூறு ரூபாய்க்குமேல் கிடைக்காது. ஆக அண்ணாமலை வாத்தியார் எழுதுவது போதும். பக்கத்தூர் பெரியபண்ணை வீட்டிற்கு அவர்தான் படம் எழுதிக் கொடுத்தார். நன்றாகத்தான் இருந்தது." என்று நான் வாதாடினேன்.

"இரண்டு வாரம்தான் இருந்தது. பின் தண்ணீர் பட்டுக் கரைந்துவிட்டது" என்று ஒருவர் இடைமறுத்தார்.

"தண்ணீரில் கரையாதபடி, எண்ணெய்க்கலரில் படம் எழுதச் சொல்லலாம்" என்றேன்.

மற்றவர்களால் மறுப்புச் சொல்ல முடியவில்லை. அத்துடன் விட்டுவிட்டார்கள்.

மறுநாள்காலை நான் வீட்டை விட்டுக்கிளம்பும்பொழுது, அண்ணாமலை வந்தார். அப்படியே என்னைக் கட்டிக்கொண்டார். அவரால் பேசக்கூட முடியவில்லை. கண்களில் வழிந்த நீரைத் துடைத்துக் கொண்டார்.

"என்ன" என்று கேட்டேன்.

"நேற்று சாவடிக்கூட்டத்தில், எனக்காக நீ பேசினாயமே!" என்றார் தட்டுத் தடுமாறி.

"ஆமாம். உள்ளூரில் எழுதத் தெரிந்தவர் இருக்கும்பொழுது, வெளியூருக்கு ஏன் போகவேண்டும்?" என்றேன். எனக்கு உள்ளூர இருந்த எண்ணமெல்லாம் செலவு குறைவாக ஆகுமென்பதுதான்.

"ஆமாம், உனக்கு ஒருவனுக்குத்தானப்பா என் அருமை தெரிகிறது."

கடைக்குப் போகும் வழியில், அதிகமான செலவு ஆகக்கூடாதென்று சொல்லிவைத்தேன்.

"இதோ, பார், முத்து! இந்தப் படத்தில் ஒரு தம்பிடிகூட எனக்குத் தரவேண்டாம். ஆணி, கலர்கள், வேலைப்பான சட்டம் இவை மட்டும் வாங்கிக்கொடுத்தால் போதும். ஆமாம்! எனக்கு ஒரு தம்பிடிப் பணம்கூட வேண்டாம். இந்தப் படத்தை ஓவியக்கலைக்காகவே எழுதப்போகிறேன்," வாத்தியார் குதுகலத்துடன் பேசி வந்தார். எனக்கு அவரைப் பார்த்துச் சிரிப்பு வந்தது.

அண்ணாமலை வாத்தியார் சொன்னபடி பணம் தனக்காக வாங்கிக்கொள்ளவில்லை. அவர் கொடுத்த விவரப்படி திரை, வர்ணங்கள் எல்லாவற்றையும் வரவழைத்துக் கொடுத்தேன். பெரிய மாளிகையைக் கட்டி முடிக்கப் போகிற நிபுணர் போல, தட்டியையும் வர்ணக் கிண்ணங்களையும் வைத்துக் கொண்டு அவர் ஆடம்பரம் செய்தார்.

ஜமீன்தாரிடம் போய் நாங்கள் ஏற்பாடு செய்துகொண்டோம். அதன் மாளிகையின் ஒரு இடத்தில், ஜமீன்தார் வேலைப்பாடான நாற்காலியில் உட்கார்ந்திருப்பார். அவரைப் பார்த்து அண்ணாமலை வாத்தியார் எழுதவேண்டியது, ஜமீன்தார் மாளிகையை விட்டு வெளிவரும்பொழுது, வாத்தியார் கையைப் பிசைந்து கொண்டு, "சீக்கிரத்தில் ஆரம்பிக்கவேண்டும்! இப்பொழுதே கூட ஆரம்பித்துவிடலாம்!" என்று உற்சாகத்துடன் இருந்தார். ஆனால் அவ்வளவு சீக்கிரத்தில் அவர் ஆரம்பித்துவிடவில்லை.

இரவு பத்து மணிக்கு நான் கடையைப் பூட்டும் பொழுது அண்ணாமலை வாத்தியார் மிக அவசரமாக வந்தார். "ஒரு சேதி, முத்து!" என்று என்னை வெளியில் அழைத்துப் போனார்.

"என்ன?" என்றேன்

"ஜமீன்தாரை நாற்காலியில் உட்காரவைத்து எழுதுவதை விட, குதிரையில் உட்கார வைத்து எழுதினால் கம்பீரமாயிருக்கும். ஜமீன்தார் பங்களாவில் ஒரு கருப்புக் குதிரை இருக்கிறது. ஓவியத்துக்கு நன்றாகயிருக்கும். ஜமீன்தாரைக் கேட்டுச் சொல்!" என்று வாத்தியார் சொன்னார்.

மறுபடியும் ஜமீன் தாரரிடம் தூது சென்றோம். குதிரையில் உட்கார்ந்திருக்கச் சம்மதித்தார். "நீண்ட நேரம் உட்கார்ந்திருக்க முடியாது. சீக்கிரம் எழுத வேண்டும்" அவர் எச்சரித்தார்.

மறு நாள் காலை நான் கண்ணைவிழித்து வெளியில் வரும்பொழுது பார்த்தால்' அண்ணாமலை வாத்தியார் உட்கார்ந்திருந்தார். "என்ன, ஐயா, இவ்வளவு அதிகாலையில்!" என்றேன்.

"ஜமீன்தாரின் படத்தைப் பற்றிதான்!"

"என்ன?"

"குதிரையில் உட்கார வைத்து எழுதுவதைவிட, ஒரு புதரைத் தாண்டிக் குதிரை குதிக்கிற நிலைமையில் எழுதினால் நன்றாக இருக்கும். பேசாமல் நிறுத்தி வைப்பதில் அசைவு, உற்சாகம், வேகம் ஒன்றுமில்லை. ஜமீன்தாரை வேட்டை உடையில் போட்டு, அடர்ந்த செடிகளைத் தாண்டி வருவதுபோல் குதிரையை வைத்தால் படத்தில் புதுமை இருக்கும்."

"சரி, எழுதுவதுதானே!"

"ஜமீன்தாரரிடம் சொல்ல வேண்டும்!"

அடிக்கடி ஜமீன்தாரரிடம் போவது எனக்குப் பிடிக்கவில்லை. இருந்தாலும் வாத்தியாருக்காகச் சென்றேன். வேட்டையின் அருமைப் பெருமைகளைப்பற்றி அவரிடம் சொன்னேன். ஜமீன்தார் வேட்டையில் பிரியம் உள்ளவர். நாங்கள் சொன்னதற்கு ஒத்துக்கொண்டார். இரண்டு நாட்களுக்கெல்லாம் அண்ணாமலை வாத்தியார் ஓவியத்தை எழுத ஆரம்பித்தார்.

முதல் நாள் ஜமீன்தாரர் வேட்டைக்குப் போவதுபோல், குதிரையில் உட்கார்ந்து, ஒரு சிறு உயரத்தைத் தாண்டிக் காண்பித்தார் இரண்டு மூன்று தடவைகள் தாண்டியதும் அவருக்குக் களைப்புவந்தது. அத்துடன் அன்று வேலை நின்றது.

நாள்தோறும் ஜமீன்தாரை அப்படிக் குதிரைமெல் தாவிக் கொண்டிருக்கச் செய்தால், அவர் சம்மதிக்கமாட்டார். மேலும் ஏதாவது ஆபத்து நேர்ந்தாலும் நேரக்கூடும். ஆதலால் அடுத்த நாளிலிருந்து, ஜமீன்தாரருக்குப் பதிலாகக் குதிரைக்காரனே குதிரைமேல் உட்கார்ந்து, குதித்து வந்தான். குதிரையை எழுதி முடிக்கும்வரை அப்படிச் செய்து கொண்டால்,பின் ஜமீன்தாரைத் தனியாக எழுதிக் கொள்ளலாம்.

மாலையில் நான்கு மணிக்கு அண்ணாமலை வாத்தியார் எழுத ஆரம்பிப்பார். வேடிக்கைப் பார்க்க ஒரு சிறு கூட்டம் கூடிவிடும். குதிரை தாவி விழும்பொழுது, அதை
பார்த்துக் கொண்டிருந்
முன்னங்கால், பின்னங்கா
வால், தலை, இப்படி ஒவ்வொ
றாக, தாவும்பொழுது உள்
நிலையில் எழுதிவந்தார்.

வேலை மிக மெதுவாக நட
தது. பலநாட்கள் கழித்து
பார்த்தால்கூட, ஓவியத்தி
முன்னேற்றம் எதுவும் தெ
யாது. எங்களுக்கு அலுப்பு
தட்டியது. அண்ணாம
வாத்தியார் மட்டும் உற்சாக
துடன் இருந்தார். ஓவிய
தைத் தவிர வேறு எதிலு
அவருக்குக் கவனம் கிடை
யாது. "இன்றைக்கு வா
மயிர்போட்டேன்." "இ
றைக்கு ஒரு கணுக்கால் முடி
தது." "நாளையதினம் இட
காலும் முடிந்துவிடும்" என்
அவர் பேசிக்கொண்டிரு
பார்.

ஓவியத்தை எழுத ஆர
பித்து நான்கு மாதங்களாகியு
குதிரை இன்னும் முடிந்
பாடில்லை. அதற்குப்பி
மழைக்காலம் ஆரம்பித்த
வேலை தடைப்பட்டது. கு
ரைக்காரனுக்கும் காய்ச்சல் வ
தது. வர்ணங்கள் ஆகிவி
டது. புதுவர்ணங்கள் வ
இரண்டுவாரமானது. பட
திறப்பு விழாவுக்கு மற்றெல்ல
வேலைகளும் முடிந்து, தயாரா
இருந்தன. கலெக்டர் து
யும் ஒத்துக்கொண்டார்.

ஆனால் படத்திறப்பு விழ
வுக்கு வேண்டிய படம் மட்டு
முடிவதாயில்லை. "ஓவியமெ
றால் சும்மாவா இருக்கிறது
அவசரப்பட்டால்? நன்று



ிருக்காது. ஒவ்வொன்றையும் வனித்து, அப்படியே மன ில் வாங்கி, திரையில் எழுத வண்டும். பின்பு வர்ணங்கள் த்துவரவேண்டும். ஒளியும் ழலும் குற்றமில்லாதபடி மைய வேண்டும். அதிலும் ருவத்தைச் சித்தரிப்பதென் ல்,......'' வாத்தியார் ஓவியக் லையின் நுணுக்கங்களைப்பற் ிப் பேச ஆரம்பித்துவிடுவார். டம் எங்களுக்கு வேண்டுமே ழிய, படத்தை எப்படி எழுதுவது என்ற பாடமல்ல?

குதிரை ஒருவாறுக எழுதப் பட்டு முடியுந்தருவாயில் வந்தது. அதன் முதுகுப்பக்கமும், கால்பக்கமும் இலேசாகக் கோடுகளுடன் விடப்பட்டிருந்தன. அதை முடித்து ஜமின்தாரரை எழுதப் போகும் சமயத்தில், ஒரு எதிர்பாராதது நிகழ்ந்தது. திடீரென்று ஒரு நாள் மாரடைப்பினுல், ஜமின்தார் இறந்துவிட்டார்!

அவருடைய படத்தைத் திறந்துவைத்து, அவருக்கு மாலைகள்போட்டு, வாழ்த்துகள் வாசித்துக் கொடுத்து, பெருமைப்படுத்தவேண்டுமென்று நினைத்துக்கொண்டிருந்த எங்களுக்குப் பெருத்த ஏமாற்றம் உண்டானது எல்லோருக்கும் அண்ணுமலை வாத்தியார் மீது கோபம் பிறந்தது. அவரால் தானே ஊரார் செய்ய இருந்த விழா தடைப்பட்டது! படத்தை எழுதுவதென்ருல் எவ்வளவு நாட்கள்! பட்டணத்தில் இருப்பவரிடம் கொடுத்திருந்தால் வேலை எப்பொழுதோ முடிந்திருக்கும்!

ஜமின்தார் இறந்ததும், போட்டோ எடுப்பவர் வந்து படம் எடுத்திருந்தார். அதில் முகம் தெளிவாக இருந்தது. அந்தப் படத்தில் மார்புவரைத் தனியாக வைத்து, கண்களை எழுதி, சிறிது வேலைசெய்து, பெரிய படமொன்றை அவர் கொண்டுவந்தார். நேரில் பார்ப்பதுபோல இல்லையென்ருலும் கூடியவரை அந்தப் படம் ஜமின்தாரரைப்போல இருந்தது. அதை வைத்து நாங்கள் விழாவை முடித்துவிட்டோம்.

ஜமின்தாரர் இறந்துபோனதில் அண்ணுமலை வாத்தியாருக்குத்தான் வருத்தம். அதிலும் "அவர் திடீரென்று இறந்து போவாரென்று நான் கனவிலும் எதிர்பார்க்கவில்லை. நான் எதிர்பார்க்கவேயில்லை!'' என்று அவர் உட்கார்ந்திருந்தார். "இன்னும் இரண்டு மாதங்கள் இருந்திருந்தால், ஓவியம் முடிந்திருக்கும்.''

வருத்தத்தில் ஆழ்ந்துபோய் அண்ணுமலை வாத்தியார் எனது கடையில் யாருடனும் பேசாமல் உட்கார்ந்திருப்பார். நான் ஒருவன்தான் அவருக்கு ஏதாவது சமாதானம் சொல்வேன். மற்றவர்கள் அவரைப் பார்க்கும்பொழுது, ஒரு குற்றவாளியைப் பார்ப்பதுபோலப் பார்த்தார்கள். அவர் ஓவியம் எழுத ஆரம்பித்ததால்தான் ஜமின்தார் இறந்தார் என்று கூடச் சிலர் பேச ஆரம்பித்தார்கள்.

இந்த நிலையில் வாத்தியாருக்கு, ஐம்பத்தைந்தாவதுவயது முடிந்து வேலையிலிருந்த ஓய்வு பெற மூன்று மாதங்கள் இருந்தன. "நான் ஊரை விட்டுப் போவதற்குள் ஓவியத்தை எப்படியாவது முடித்துவிடுகிறேன்! அண்ணுமலை சொல்லிக்கொண்டு, மீண்டும் ஜமின்தார் தோட்டத்துக்குள் போய் குதிரையைக்கொண்டுவரச்சொல்லி எழுத ஆரம்பித்தார்.

இரண்டு மாதங்கள் கடைப் பக்கமே வரவில்லை. திடீரென்று ஒருநாள் காலை வீட்டிற்கு வந்து "ஓவியம் முடிந்துவிட்டது, வா, பார்க்கலாம்!'' என்னை அழைத்துப் போனுர், ஏழ்மை அதிகரித்திருக்கிறது என்பது அவரது உடையைப் பார்த்தால் தெரிந்தது. முகத்தில் பத்து ஆண்டு வயது கூடுதலாகக் காட்டியது.

துணியை நீக்கி ஓவியத்தை அவர் காட்டினுர். நான் பார்த்ததும் திடுக்கிட்டேன். ஓவியத்தில் குதிரையும், குதிரைமேல் ஜமின்தார் வேலைக்காரனும் இருந்தார்கள்! ஜமின்தார் படத்தை எழுதச்சொல்லப் போய், ஜமின்தாருடன் குதிரையையும் சேர்த்து ஆரம்பித்து, குதிரையை மட்டும் எழுதி, பின் குதிரைக்காரனையும் சேர்த்து எழுதிவிட்டார்! ஜமின்தாரருடைய வேலைக்காரனைப் படம்போடவா நான் பணம் போட்டு வர்ணங்கள் வாங்கிக்கொடுத்தது! நான் கோபமாகத்திரும்பிவிட்டேன்!

இரண்டு வாரத்திற்கப்புறம் ஒருநாளிரவு என்கடைப்பக்கம் அண்ணுமலை வாத்தியார் வந்து, "என் ஊருக்குக் காலையில் போகப்போகிறேன்,'' என்ருர்.

"எப்பொழுது திரும்புகிறீர்கள்?'' என்றேன்.

"இல்லை, குடும்பத்துடன் வீட்டைக் காலிசெய்துகொண்டு போகிறேன்!,'

"ஏன்?''

"இங்கு இனிமேல் என்ன வேலை! கிராமத்திற்குப் போனுல், செலவு இன்னும் குறையும்''

பள்ளிக்கூடத்தில் இன்னும் ஒரு ஆண்டுக்கு நீடிக்கச் சொல்லி எழுதிப் போட்டிருந்தார். மேலதிகாரிகள் அந்த வேண்டுகோளை மறுத்துவிட்டார்கள். ஆதலால் கடைசியாக அவர் ஊரை விட்டுத் தன் சொந்தக் கிராமத்துக்குப் போக முடிவு செய்துவிட்டார். முப்பதாண்டுகள் அவர் எங்களூர்ப் பள்ளிக்கூடத்தில் வேலை செய்திருக்கிருர்.

அவரைப் பார்க்கும்பொழுது எனக்குப் பரிதாபமாயிருந்தது. "ஏன் அதற்குள் அவசரம்? கடையின் போர்டுகள் மீண்டும் எழுதவேண்டியிருக்கிறது. வீட்டில் கூட வேலைகள் இருக்கின்றன. அதைப் பார்க்கலாம்!'' என்றேன்.

முன்பெல்லாம் ஆவலுடன் ஏற்றுக்கொள்பவர் இப்பொழுது ஏற்றுக்கொள்ளவில்லை. "வர்ணங்களைப் பார்த்தாலே எனக்கென்னவோ போலிருக்கிறது. நான் சொந்தக் கிராமத்துக்குப் போய் விடுகிறேன். அதுதான் நல்லது'' என்று அவர் தலையசைத்தார்.

மறு நாள் காலை அண்ணுமலை வாத்தியார் தன் குடும்பத்துடன் புறப்பட்டு போய் விட்டார். அவர் எழுதிய ஓவியத்தைப் பள்ளிக் கூடத்தில் கொண்டு போய் வைத்தோம். புழுதியடைந்து மூலையில் கிடந்தது. எங்களூரில் யாராவது மிக மெதுவாக வேலை செய்தால், "அண்ணுமலை வாத்தியார் படமெழுதினுற்போல'' என்று சொல்வது வழக்கம் அவர் பெயர் காதில் விழும்பொழுது, அவரை நம்பி நான் வீணுகச் செல வழித்த பணம் கவனத்துக்கு வரும்.

ஐந்தாண்டுகள் கழிந்தன. ஒருநாள், புதுச் சேரிக் கல்லூரியில் வேலை பார்த்த பிரெஞ்சுக்காரர் எங்களூர்ப் பள்ளிக்கூடத்துக்கு வந்திருந்தார். அவர் பள்ளிக் கூடத்தைச் சுற்றிப் பார்க்கும் பொழுது, மூலையில் புழுதியடைந்த படத்தைப் பார்த்திருக்கிருர். வெளிச்சத்துக்குக் கொண்டு வரச்சொல்லி, தூசியைத் துடைத்துப் பார்த்தார். "எவ்வளவு உயர்ந்த ஓவியம்!'' என்று கொண்டாடி விட்டு அதைப் பத்திரமாக வைக்கும்படிச் சொல்லிப் போனுர்.

ஊருக்கு வந்த பிரெஞ்சுக்காரர் அண்ணுமலை வாத்தியார் படத்தைப் பார்த்துப் புகழ்ந்துவிட்டுப் போனுர் என்றதும், உள்ளூரில் இருந்தவர்கள் படத்தைப் போய்ப்பார்க்க ஆரம்பித்தார்கள். படத்தின் புகழ் இரண்டு நாள் கழித்து இன்னும் அதிகமானது. ஏனென்ருல், ஊருக்கு வந்துவிட்டு பிரெஞ்சுக்காரர் புதுச்சேரிக்குப் போய் இன்னும் பத்துப் பிரெஞ்சுக்காரர்களுடன் திரும்பிவந்தார். அவர்கள் படத்தைப் பார்த்து விட்டுக் கையை உயர்த்தி ஆச்சரியத்துடன் பிரெஞ்சு மொழியில் ஏதேதோ சொல்லிக் கொண்டார்களாம். படத்திற்கு ஐயாயிரம் ரூபாய் வரைக் கொடுப்பதாக அவர்கள் சொன்னுர்களாம். பஞ்சாயத்து போர்டைக் கேட்டுக் கொண்டு சொல்வதாக பள்ளிக் கூடத் தலைமை ஆசிரியர் சொல்லி அனுப்பினுர்.

நமது அண்ணுமலை வாத்தியார் எழுதிய படத்திற்கா ஐயாயிரம் ரூபாய் தருவதாகச் சொல்கிருர்கள். என்று நான் ஆச்சரியமடைந்தேன். ஐயாயிரம் ரூபாய் என்ற விலை, படத்தின் மதிப்பை எங்களூர்க்காரர்களிடம் உயர்த்தியது அப்படி என்ன தான் இருக்கிறது. கடை வேலையை ஒரு கால் மணி நேரம் விட்டு. பள்ளிக்கூடத்துக்குப் போனேன்.

ஊரிலிருந்தவர்களில் பெரும்பாலோர் அந்தப் படத்தின் முன் நின்றுகொண்டிருந்தார்கள். கூட்டத்தைத் தள்ளிக் கொண்டு முன்னுல் போய் பார்த்தேன். முன்பு நான் பார்த்தபடம்தான், ஆனுல் இப்பொழுது புதிய மதிப்புடன் அதைப்பார்த்தேன்! கருப்புக் குதிரை தாவுவது அப்படியே தத்ரூபமாகச் சித்தரிக்கப்பட்டிருந்தது, அதில் மேலிருந்த குதிரைக்காரன் குதிரையுடன் தாவிக் குதிக்கப்போகும் பாவனையில் இருந்தான். நேரில் பார்ப்பது போல் இருந்தது! கீழே இருந்த செடி கொடிகள், குதிரைக்காரனின் தலைப்பாகை காற்றில் அசைவது, தூரத்தில் நில வானத்தில் வெண்மேகங்கள் படர்ந்திருப்பது எல்லாம் மிக நுணுக்கமாகத் தீட்டப்பட்டிருந்தன.

படத்தைப் பார்த்தவர்கள் "பிரமாதமானபடம்! அற்புதமான சாதனை!'' என்றெல்லாம் புகழ்ந்தார்கள்.

படத்தை ஐயாயிரத்துக்கு விற்ருல், என்னென்ன செய்யலாம் என்று பஞ்சாயத்துக் கூட்டத்தில் பேசினுர்கள். படத்தை என்னவிலை கொடுத்தும் பிரெஞ்சுக்காரர்கள் வாங்க தயாராகஇருந்தார்கள். அந்தப் படத்தை வாங்கிப் பாரிசுக்கு அனுப்ப அவர்கள் இருந்தார்கள். இதற்கிடையில், அரசாங்க உத்தரவின்றி இந்த நாட்டில் எழுதப்பட்டபடத்தை வெளிநாட்டுக்காரர்களுக்கு விற்கக்கூடாதென்று கலெக்டரிடமிருந்து உத்தரவு வந்தது.

பின்படத்தைப் பார்க்க கலெக்டர் வந்தார். பட்டணத்திலிருந்து பல அதிகாரிகள்வந்தார்கள். இவர்களுக்கெல்லாம் மேலாக டில்லியிலிருக்கும் அதிகாரி ஒருவர் வந்தார். பத்திரிக்கைக்காரர்கள் வந்தார்கள். சிலர் அதைப்போட்டோ பிடித்தார்கள், சிலர் அதே போல் எழுதமுயன்ருர்கள். பத்திரிக்கைகளில் எங்களூர்ப் பெயர் அடிபட்டது. அண்ணுமலை வாத்தியார் "மிகத் திறமைவாய்ந்த ஓவிய நிபுணராகக் கொண்டாடப்பட்டார்.

"இந்த ஓவியத்தைத் தீட்டியவர் எங்கே?'' என்று வருகிறவர்கள் கேட்டார்கள். அவரை அழைத்துவந்து பெரிய பாராட்டுக்கூட்டம் போட்டு வாழ்த்துகள் வழங்கத் திட்டம் போட்டோம். பெரிய அதிகாரிகள் வருவதாகச் சொன்னுர்கள். அண்ணுமலை வாத்தியாரை அழைத்துவர நான் புறப்பட்டேன்.

அவருடைய கிராமத்தில் போய் கேட்டதில் அண்ணுமலை வாத்தியாரைப்பற்றிப் பலருக்குத் தெரியவில்லை. முப்பதாண்டுகளாக எங்களூரிலிருந்தபொழுதே, அவருடைய அருமை எங்களுக்குத் தெரிய

தவறும் முட்டாள்தனமும்

முட்டாள்தனமாக நாம் எவ்வளவோ காரியங்களைச் செய்துவிடுகிறோம். படுக்கைக்குப் போகும்பொழுது நீங்கள் யோசித்துப் பாருங்கள், காலையில் எழுந்ததிலிருந்து என்னென்ன செய்தோமென்று, அன்று நடந்த நிகழ்ச்சிகள்—மிகச்சிறு சம்பவங்கள் பலப்பல இருந்திருக்கும், அவற்றில் பல "சிறுபிள்ளைத்தனமாக, முட்டாள் தனமாக" நடந்திருக்கும். சிறு சச்சரவுகள், கோபங்கள், பேச்சுவார்த்தைகள் இவைகள் நடந்திருக்கும். ஆனால் மிகச் சிறு சம்பவங்களாகப் போய்விடுவதால், ஆபத்தை உண்டாக்குவதில்லை. சீக்கிரத்தில் மறக்கப்பட்டுவிடுகின்றன.

"ஒவ்வொரு மனிதனும் ஒரு நாளில் ஐந்துநிமிடமாவது முட்டாள்தனமாக இருந்து விடுகிறான். புத்திசாலியாக இருப்பவன் அந்த ஐந்து நிமிடத்துக்குமேல் தனது முட்டாள்தனத்தைப் போக அனுமதிப்பதில்லை." என்று ஒருவர் கூறினார். முட்டாள்தனமாக ஒரோர் சமயங்களில் நடக்காதவர்கள் இருக்கமாட்டார்கள். அந்த அளவு எவ்வளவுக்கெவ்வளவு குறைந்திருக்கிறதோ, அந்தப்படி அவன் புத்திசாலி என்று மற்றவர்களால் கருதப்படுகிறான், அதிகமாக இருந்தால் முட்டாள் என்று அழைக்கப்படுகிறான்.

தவறுகள் ஏற்படுவதியல்பு, ஒருதடவை தவறு ஏற்பட்டால், அதே தவறை மீண்டும் தொடர்ந்து செய்துகொண்டிருந்தால் அதற்கு முட்டாள்தனம் என்று பெயர்! முட்டாள் தவறு செய்கிறான். ஆனால் தவறு செய்பவர்களெல்லாம் முட்டாளாகிவிடுவதில்லை! உதாரணமாக ஐன்சுடைன் இருபதாம் நூற்றாண்டின் தலை சிறந்த விஞ்ஞான மேதையாக விளங்கியவர். அவர் சொன்னார். "ஆராய்ச்சிகளில் நான் 100க்கு 89 தடவைகள் தவருகப் போயிருக்கிறேன்." அவரைப் போன்றவர்கள்கூட 100 தடவைகள் தவருகப்போய் 1 தடவைதான் உண்மையை அடைகிறார்கள். அவருக்கும் மற்றவர்களுக்கும் என்ன வித்தியாசமென்றால், ஒருதடவை தவருகப் போவது தெரிந்ததும், அதைவிட்டு வேறொரு முறையில் செல்வார்கள். அதிலும் தவறு ஏற்பட்டால், மூன்றாவது வழி காண்பார்கள். அதிலும் தவறுவந்தால், முதல் மூன்று தடவைகளிலும் ஏற்பட்ட தவறுதல்கள் மீண்டும் ஏற்படாதபடி, மேற்கொண்டு ஆராய்வார்கள். கடைசியாகஉண்மையானபலன் கிடைத்ததும், அதைக் கெட்டியாகப் பிடித்துவிடுவார்கள். ஒவ்வொரு தவறும், ஒரு புது அனுபவத்தை—புது உண்மையை அவர்களுக்குத் தருகிறது. ஒவ்வொரு தவறும் "எப்படிச் செய்யக்கூடாது" என்ற உண்மையைக் கற்பிக்கிறது!

புத்திசாலிகளுக்குத் தவறு தெரிந்ததும் திருத்திக்கொள்கிறார்கள். தவறு சுட்டிக்காட்டப்பட்டால் அதில் கோபம் வருவதில்லை. அவ்வாறு அமைதியுடன் பிறர் சொல்வதை ஏற்று, கவனித்துப் பார்த்தால்தான் குறைகளை நீக்கமுடியும். பெரும் பதவியிலிருப்பவர்களுக்கு அது மிக அவசியம். ஒருசமயம் ஆபிரகாம் லிங்கன் தனக்கு வேண்டிய அரசியல்வாதி சொன்னதைக் கேட்டு, அவரைத் திருப்திபடுத்த, ஒரு உத்திரவைப் போட்டார். அவருக்குக் கீழ் வேலைபார்த்த சுடான்டன் என்பவருக்கு அந்த உத்தரவைப் பார்த்ததும் கோபம் வந்தது. "லிங்கன் முட்டாள்தனமாக இந்த உத்தரவைப் போட்டிருக்கிறார்" என்று சொல்லி, உத்தரவை மேற்கொண்டு அனுப்பாமல் வைத்துக்கொண்டார்.

சுடான்டன் லிங்கனைப்பற்றி "முட்டாள்தனமாக" என்று கூறியது லிங்கன் காதுக்கு எட்டியது. தன்னைப் பற்றி "முட்டாள்" என்று சுடான்டன் கூறியது அவருக்குக் கோபத்தைத் தரவில்லை. "சுடான்டன் சொல்வது எப்பொழுதும் சரியாக இருக்கும். என்னைப்பற்றி முட்டாள் என்று கூறியிருந்தால் அதில் உண்மையிருக்கலாம். மீண்டும் அந்த உத்தரவைப் பார்க்க வேண்டும்!" என்று முதலில் போட்ட உத்தரவை வரவழைத்து, பரிசீலனை செய்தாராம். அதில் இருந்த தவறு லிங்கனுக்குப் புரிந்தது. பிறகு உத்தரவை மாற்றி, வேறு சரியான உத்தரவைப் போட்டாராம். லிங்கனைப்போல் எவ்வளவு பேர்கள் கோபம் வராமல் "முட்டாள் தனமான" உத்தரவுகளை மீண்டும் பரிசீலித்து, தான் செய்த தவறைத் திருத்திக்கொள்வார்கள்!

பென்சமின் பிராங்கிலின் என்ற விஞ்ஞானி தன்னிடமுள்ள குறைபாடுகளை யெல்லாம் ஒரு காகிதத்தில் எழுதி வைத்திருப்பாராம். அவைகளைப் பிரித்துப் பார்த்ததில் 13 முக்கிய குறைபாடுகள் அவருக்குப் பட்டதாம். அவற்றில், நேரத்தை வீணாக்குவது, சிறிய காரியங்களில் மனதை அலட்டிக்கொள்வது வீணாகப் பிறருடன்வாதிடுவது இது போன்றவை இருந்தன. அவற்றை ஒவ்வொன்றாக நீக்க-மிகக் குறைந்த அளவுக்குக் குறைத்துவிட அவர் உறுதியுடன் இருந்தார். தன்னைத்தானே ஒழுங்குபடுத்தியதன் காரணமாக, பல்வேறு துறைகளிலும் அதிகரிக்கத்தக்க திறமையை அவரால் பெற முடிந்தது. அவர் ஒருதடவை எழுதினார் "மிகக்கடினமான மூன்று பொருள்கள் இருக்கின்றன. அவை எஃகு, வைரம், தன்னைத்தானே உணர்ந்துகொள்வது!" ○

ல்லை. வெளியூர்க்காரர் வந்து சொல்லிதான் தெரிந்தது. அதைப்போல, அந்தக்கிராமத்தார்களுக்கு அங்கிருப்பவரின் அருமை தெரியாமலிருந்தது. கடைசியாகத் தேடிக் கண்டுபிடித்து ஒரு குடிசைக்குப் போய்ச் சேர்ந்தேன், வாத்தியாருடைய பையன் வெளியில் உட்கார்ந்திருந்தான்.

"அப்பா எங்கேயிருக்கிறார்?" என்று கேட்டேன்.

"யார்?"

"அண்ணாமலை வாத்தியார் தான்!"

"அப்பா செத்துப்போய் இரண்டு வருசமாகிவிட்டதே!" என்றான்.

நான் பேசாமல் திரும்பினேன்.

புழுதி படிந்துகிடந்த ஓவியத்தைப் பாராட்டியதும், அண்ணாமலை வாத்தியாரைப் புகழ ஆரம்பித்தார்கள். அவர் இறந்துவிட்டார் என்ற செய்தி, அவருடைய புகழை இன்னும் அதிகமாக்கியது! ○

வரவுக்கு மேல் செலவு

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

துக் கொண்டார்களே தவிர எதிர்பார்த்த நிதிகள் கிடைக்கும் என்பதற்கான நம்பிக்கையை திட்டத்தைப் போட்டவர்களே மெதுவாக இழந்து வருகிறார்கள். "எதிர்பார்த்த சூழ்நிலைகள் இல்லாததால், திட்டத்தை மாற்றவோ குறைக்கவோ செய்வதைத் தவிர வேறு வழியில்லை" என்று திட்டக்குழுவிலிருந்த சி. டி. தேசுமுக் கூறுகிறார். எதிர்பார்த்த சூழ்நிலை இல்லை என்பதுடன், எதிர்பார்த்ததற்கு முற்றிலும் மாறான—எதிரான சூழ்நிலை உண்டாகிவருகிறது.

"குதிரை கீழே தள்ளியது மல்லாமல், குழியையும் பறித்தது" என்று ஒரு பழமொழி சொல்லுவார்கள். அதைப்போல், செலவுக்கு மேல் வருமானத்தைக் காட்டி, மிகுதிப் பணத்தை மாநில அரசுகள் திட்டத்துக்காக தருமென்று திட்டக் குழுவினர் கணக்குப் போட்டார்கள், மாநில அரசுகள் நிதிசேர்த்துத் தர முடியாமல் போனது மட்டுமல்ல, போட்டவரவு-செலவுத் திட்டத்தைச் சரிக்கட்ட, அங்கிருந்து இங்கு நிதிஉதவி தரவேண்டிய நிலையையும் உண்டாக்கியுள்ளன. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 1956-57, 1957-58 இரண்டு ஆண்டுகளும் போய்விடும். இவ்விரண்டாண்டுகளிலும் மாநில அரசுகள் தரவேண்டிய பங்கைத் தரவில்லை. பாக்கியிருக்கும் மூன்றாண்டுகளில் நிறைவேற்ற முயன்றால், அது மாநில அரசாங்கங்களுக்கு, கடினமான செயலாகிவிடும். பிறகு மாநில அரசு செலுத்தவேண்டிய பங்கையும் மத்திய அரசாங்கமே ஏற்றுக்கொள்ளவேண்டி நேரிடும்.

—இரா. செழியன்.

பாக்ரா — நங்கல் திட்டத்தில்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

போய்விடுகிறது' என்று சுலோகுமும் சொல்கிறார்.

பக்ரா அணைக்கட்டைக் கட்ட அழைக்கப்பட்டிருக்கும் அமெரிக்க நிபுணர் கருத்துப்படியே, அங்கு வேலை பார்ப்பவர்களின் தொகை தேவையான அளவைவிட நான்கு மடங்கு ஐந்து மடங்கு அதிகமாக இருக்கிறது. பக்ரா-நங்கல் திட்டம் இந்தியாவிலேயே மிகப்பெரியது. அதற்காக இந்திய அரசாங்கம் செலவிடப்போகும் தொகை 176 கோடி ரூபாய்! அதில் அளவுக்கு அதிகமான பேர்கள் வேலைபார்ப்பவர்களும், அதிகாரிகளும் இருக்கின்றனர். காலம் சென்ற குமாரசாமி ராசர் அவர்கள், "குறைந்த செலவில் கட்டி முடிக்கக் கூடிய பல அணைக்கட்டுகளுக்கு இந்தியப் பேரரசு ஏராளமான பொருளைச் செலவிட்டு வருகிறது" என்று சொல்லியது, பக்ராநங்கல் திட்டம் நிறைவேற்றப்படுவதில் மெய்ப்பிக்கப்படுகிறது. ○

எகிப்தில் தேர்தல்!

எகிப்தின் புதிய அரசியலமைப்பின் கீழ், தேர்தல்கள் நடத்தப்படப் போகின்றன. அதில் போட்டியிடுபவர்கள் வேடிக்கையான வேண்டுகோள்களை விடுத்து, வாக்குகளைப்பெற முயற்சிக்கின்றனர்.

தேர்தலில் போட்டியிடும் ஒரு பெண், "நான் தேர்ந்தெடுக்கப்பட்டால், சோப் உதட்டுக்குத் தடவும் மை இவைகளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளை ஏற்படுத்தப் பாடுபடுவேன்!" என்று அறிவித்துள்ளாராம். பெண்களின் வாக்குகளைப் பெற அந்தப் பெண் அபேட்சகர் அப்படிச் சொன்னார். "என்னைத் தேர்ந்தெடுத்தால், கல்யாணமாகாத பெண்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு மாப்பிள்ளை கிடைக்கும்படிச் செய்வேன்" என்று ஒரு அபேட்சகர்—அவர் ஆண்—பெண்களின் வாக்குகளைப் பெற வாகுறுதி அளித்துள்ளார்!

மத்திய பிரதேசத்தில் புது நகரம்!

—(0)—

அரசாங்கம் 2 கோடி ரூபாய் செலவிடுகிறது.

—(0)—

பெரிய கட்டிடங்களைக்கட்டுவதில் இந்திய அரசாங்கத்துக்கு முதலில் ஆவல் இருந்தது. அமெரிக்காவில் இருப்பதைப்போல், பல அடுக்குகள் கொண்ட உயர்ந்த கட்டிடங்களைக் கட்டுவதில் உற்சாகங் காட்டினர். வெளிநாடுகளைச் சுற்றிப் பார்த்துத் திரும்புகிற நேரு பண்டிதர் அத்தகைய கட்டிடங்களைப் பார்த்துப் பார்த்துப் பூரித்துப்போனர். பல சமயங்களில் தேவைக்கு அதிகமான அளவுகூட கட்டிடங்கள் கட்டப்பட்டன. கட்டிடங்கள் எழுப்பப்பட்டபின், அவற்றை என்ன செய்யலாம் என்று யோசித்து அவைகளுக்கு புது அலுவலகங்கள் கொண்டுவரப்பட்டன.

கட்டிடங்கள் எழுப்புவதில் இந்திய அரசாங்கத்துக்கு உண்டான ஆவல் இப்பொழுது இன்னும் ஒருபடி உயர்ந்து, பெரிய நகரங்களை உண்டாக்குவதில் போய் நிற்கிறது.

ஒரிசா மாநிலத்திற்குப் புதிய தலைநகரம் கட்டிமுடிக்கப் பட்டது.

பஞ்சாப் மாநிலத்துக்குச் "சாண்டிகார்" என்ற இடத்தில் புதுநகரம் கட்டப்பட்டு வருகிறது.

மத்தியப்பிரதேசத்தில் போபால் நகருக்கு அருகில், ஒரு புது நகரம் அமைக்கப்பட்டு வருகிறது. அது கட்டப்பட்டு முடிந்ததும், மத்திய பிரதேசத்தின் தலைமைப்பீடம் அங்கு நிலைபெறும். போபாலிலிருந்து 2 மைல் தூரத்தில் பரந்த வெளியாகக் கிடக்கும் இடம் நிபுணர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, "அழகான, கண்ணைக் கவரும் புதிய நகரத்தை உண்டாக்குவதற்கான திட்டங்கள் விரைவாகப் போடப்பட்டு வருகின்றன" என்று பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. அதற்குள் பள்ளிக்கூடங்கள், உணவுவிடுதிகள், மருத்துவ நிலையங்கள் விரிவாக்கப்பட்டு வருகின்றன. பாதைகளில், பாலங்களில் ஒரு புறம் வேலை நடந்து வருகின்றன. தண்ணீர்க்குழாய், மின்சாரம் இவைகளுக்குத் திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன. தெருக்களும், மார்க்கெட் இடங்களும் சிறிது சிறிதாக உருப்பெருகின்றன. விளையாட்டு மைதானங்கள், பொழுது போக்கு பூங்காவனங்கள் இவைகளுக்கான இடம் ஒதுக்கப்பட்டு திருத்தியமைக்கப்படுகின்றன- புதிய நகரத்திலிருந்து போபாலுக்கும் வெளியூர்களுக்கும் தொடர்பு உண்டாகப் புதுப்பாதைகள் போடப்படுகின்றன. "புதுநகரம் மெதுவாக எழுகிறது" என்று நேரில் பார்ப்பவர்கள் கூறுகிறார்கள்.

இந்தப் புது நகரத்தை உருவாக்குவதில் அரசாங்கத்திற்கு 2 கோடி ரூபாய் செலவாகுமென்று இப்பொழுது திட்டமிடப்பட்டுள்ளது. இன்னும் செல்லச் செல்ல அந்தச் செலவு இன்னும் அதிகரிக்கலாம்.

புதிதாக வரும் நகரத்தில், 2000 வீடுகள் கட்டுவதற்கு இடங்கள் செப்பனிடப்பட்டுள்ளன. அரசாங்கமும் பெரும்பாலான கட்டிடங்களைக் கட்டி, அரசாங்க அதிகாரிகளுக்கும் வேலைபார்ப்பவர்களுக்கும் தரமுன் வந்துள்ளது. வாடகை அதிகமிருக்காதாம். ஒரு சமையலறையும் இரண்டு அறைகளும் முன்பக்கமும் கொண்ட சிறு வீட்டுக்கு 2 அல்லது 3 ரூபாய்க்குமேல் வாடகை வாங்க வேண்டாமென்று அரசாங்கம் முடிவு செய்துள்ளதாகத் தெரிகிறது. புதிய நகர அமைப்பின் உள் 9 மைல் நீளத்திற்கு நல்ல பாதைச் சுற்றிச் சுற்றி வரும். 10,000 பேர்களுக்குத் தகுந்த தண்ணீர் வசதிகள் இருக்கும். அதற்காக அருகிலுள்ள மலைச்சரிவில் தண்ணீர் சேமிக்கும் தொட்டியும் சுத்தப்படுத்தும் நிலையமும் அமைக்கப்படுகின்றன. ஒவ்வொரு வீட்டுக்கும் மின்சாரவசதி தரப்படும்.

புதிய நகரத்திற்கு வந்தவர்கள் எதற்கும் வெளியில் போக வேண்டிய அவசியம் இல்லாமல், தபால் தந்தி நிலையம், பள்ளிக் கூடங்கள், மருத்துவ நிலையங்கள், கடைகள், எல்லாம் அங்கு வைக்கப்படும்.

சட்டசபை உறுப்பினர்களுக்காக 125 வீடுகள் ஒதுக்கி வைக்கப்படுமாம். மற்ற வீடுகள் அரசாங்க அதிகாரிகளுக்கும் ஊழியர்களுக்கும் தரப்படும்.

போபாலுக்கு அருகில் உண்டாகும் புதிய நகரத்தில் எல்லா வேலைகளும் துரிதமாக நடைபெறுகின்றன. இலாக்காக்கள் ஒன்றையொன்று போட்டியிட்டுக்கொண்டு, வேலைகளைச் செய்து வருகின்றன. அதிவேகத்தில் கட்டிடங்கள் எழும்புகின்றன. பாதைகள் போடப்படுகின்றன. பக்கத்திலிருக்கும் இரயில்வே நிலையத்தைச் செப்பனிட்டுப் புதுப்பித்துத் தர, மத்திய அரசாங்கத்தின் இரயில்வே இலாகா 10 லட்சம் ரூபாய்களை ஒதுக்கியுள்ளது.

வட இந்தியாவில் இலட்சக்கணக்கில், கோடிக்கணக்கில் பணம் தரப்பட்டு, புது நகரங்கள் எழுப்பப்படுகின்றன. மனித சஞ்சாரமற்ற இடத்தில் "அழகான கவர்ச்சிகரமான" கட்டிடங்கள் கட்டப்படுகின்றன ஆனல் தென்னாட்டில், சிறு குப்பத்தைக்கூட நல்ல நிலைமையில் திருத்தியமைத்துத் தருவதற்கு வழியில்லாமல் இருக்கிறது. ○

எதிர்க்கட்சி

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

சட்டசபையில் வேறென்ன செய்யவேண்டும்? பேசத்தானே வேண்டும், பேசுகிறவர்கள் - பேசத்தெரிந்தவர்கள் - தன்னுடைய கருத்தைத் தெளிவுற தெரிவிக்கும் ஆற்றல் படைத்தவர்கள் அங்கு செல்லவேண்டும், விவாதங்களில் கலந்து அறிவுரை தரவேண்டும், "பேசுகிறார்களே, பேசுகிறார்களே!" என்றால் பேசுவதைத் தவிர வேறென்ன சட்டசபையில் செய்யவேண்டும்.

சட்டசபைக்குச் சென்றால் முன்னூறு தண்டால் பஸ்கி என்று வேலைகள் செய்து காட்ட வேண்டுமா? கம்பிமேல் நடந்து காட்ட வேண்டுமா, கனமான இரும்புக் குண்டை தூக்கி எறிந்து முண்டாவில் தட்டி விழச் செய்யவேண்டுமா? கையை ஊன்றாமல் கர்ணம் போடுவது, கண்ணைக் கட்டிக் கொண்டு கத்தியை வீசுவது, கம்பியை வளைப்பது, வளையத்தில் தொங்குவது இப்படி ஏதாவது செய்து காட்ட வேண்டுமா? சட்டசபை என்றால், அரசாங்கக் காரியங்களைப் பற்றிப் பேசத்தான் இருக்கிறது. அந்த வேலையை திராவிட முன்னேற்றக் கழகம் செம்மையாகச் செய்து வருகிறது.

எதிர்க்கட்சிகள் எண்ணிக்கையில் குறைந்த அங்கத்தினர்களை உடையவர்களாக இருந்தபோதிலும், அவைகளுக்கு மதிப்பு அளித்துச் செயலாற்றுவோம் என்று ஆரம்பத்தில் மந்திரிகள் எதிர்க்கட்சிகளைப்பற்றிப் பேசினர்கள். ஆனல் தாய்க்கு முன் கூட்டி பாய்ந்து செல்வதைப் போல, காங்கிரசிலுள்ள சில குட்டித் தேவதைகள் எதிர்க்கட்சிகளைப்பற்றி அலட்சியப் படுத்திப் பேசத் தொடங்கியுள்ளார்கள், அடுக்குமொழியில் பேசத் தொடங்கி, தடுக்கிவிழுகிறார்கள். அவர்தம் சிறுசொற்கள் சிறுவர்வாயினும் சிரிப்பை விளைவிக்கும்.

அலட்சியமாகப் பேசுவதுடன், திராவிட முன்னேற்றக்கழகத்தின் மீது ஒரு வேடிக்கையான குற்றச்சாட்டையும் அவர்கள் வீசுகிறார்கள். "காங்கிரசு இதைச்செய்தது, அதைச் செய்தது, திராவிட முன்னேற்றக்கழகம் என்ன செய்தது? பேசுகிறார்கள் அவ்வளவு தான்!"

இதை நாம் மறுக்கவில்லை, ஆனல் வேறுவகையில் நடைபெறமுடியாத சூழ்நிலை இருக்கிறது.

காங்கிரசு ஆளுங்கட்சியாக இருக்கிறது. எதையும் செய்யக்கூடிய அரசியல் அதிகாரம் அவர்களிடமிருக்கிறது. எனவே அவர்கள்தாம் எதையும் செய்யமுடியும்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆளுங்கட்சியாக இல்லை. அதனிடம் அதிகாரம் இல்லை. எனவே அதனல் எதையும் செய்யமுடியவில்லை.

ஆளுங்கட்சியால்தான் செய்யமுடியும், எதிர்க்கட்சியால் அதைப்பற்றிப் பேசத்தான் முடியும்!

இன்னுஞ் சொல்லப்போனல் செய்வதற்குத் தான் ஆளுங் கட்சி இருக்கிறது, அதைப் பற்றிப் பேசத்தான் எதிர்க்கட்சி இருக்கிறது! இந்த உண்மை தெரியாமல், "காங்கிரசுக் கட்சி இதையிதைச் செய்துள்ளது, திராவிட முன்னேற்றக் கழகம் எதுவும் செய்யவில்லை" என்று சொல்வதில் அர்த்தமில்லை. அதிகாரத்திலிருப்பதால் காங்கிரசுக்கட்சி செய்கிறது, அதிகாரமில்லை திராவிட முன்னேற்றக் கழகம் எதுவும் செய்யமுடியாமல் இருக்கிறது.

காங்கிரசுக் கட்சி பதினைந்து ஆண்டுகளுக்கு மேல் ஆட்சிப் பீடத்தில் இருந்திருக்கிறது. அதற்குச்செய்வதற்கானவாய்ப்பும் வசதிகளும் கிடைத்தன. அதைப்போல திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் ஆளும் பொறுப்பு கிடைத்திருந்து அவர்கள் எதையும் செய்யாமல் போய்விட்டால், அப்பொழுது காரியமாற்றிய காங்கிரசையும் காரியமாற்றாத மாற்றுக் கட்சியினரையும் ஒப்பிட்டுக் கூட்டி "இதோ, பாருங்கள்! நாங்கள் இவ்வளவு செய்தது, அவர்கள் எதுவும் செய்யவில்லை!" என்று கூறினல் அதற்கு அர்த்தமுண்டு.

பதினைந்தாண்டுகளாக ஆட்சிப் பீடத்தில் தொடர்ந்து இருக்கும் அவர்கள், சட்டசபைக்குள் வந்து மூன்று மாதங்கள்கூட ஆகாத நம்மைப்பற்றி "என்ன செய்தார்கள், என்ன செய்தார்கள்?" என்று பேசுகிறார்கள். ஆட்சிப் பொறுப்பு எங்களுக்கு வாய்க்கட்டும் அப்பொழுது செய்து காட்டுகிறோம் என்றுதான் சொல்லத் தோன்றுகிறது! ○

"தென்னாடு தனிப்பட்ட பகுதி"

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

மாநிலங்கள் கூட்டுமுறையில் சேர்ந்திருக்கின்றன. அவைகள் வளர்ச்சியடைந்தும் பல வகைப்பட்ட நிலையில் இருக்கின்றன. புதிதாக வளர்ச்சித் திட்டங்களைப் போடும்பொழுது முன்னதாக வளர்ச்சியடைந்துள்ள மாநிலங்கள் அதன் பெரும்பகுதிச் செலவை ஏற்றுக்கொள்ளவேண்டும்.

இந்தியா முழுவதையும், ஒன்ருக வைத்துத் திட்டங்களைத் தீட்டுவது நல்லதல்ல. இந்தியாவின் நிலப்பரப்பு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பகுதியின் தேவைகளையும் கண்டறிந்து, அதற்குத் தேவையான திட்டங்களைப் போடவேண்டும். அதுதான் உண்மையான நீதியை வழங்கும்.

திட்டமிட்டு நாட்டின் பொருளாதாரத்தை வளர்ப்பதென்ருல், அதில் ஒழுங்கான வளர்ச்சியைக் காணவேண்டும். திட்டத்தின் அடிப்படையில் அதை நடத்துவதற்கான நிதி நிலைமை நாட்டுக்கு இருக்கும் நாட்டில் நல்ல நிதிநிலைமை எப்பொழுது இருக்கிறதென்ருல், மக்களிடத்தில் பொதுவாக பணவசதி சீரானமுறையில் அதிகமாகவேண்டும். பொது மக்களுக்கு பணவசதி அதிகமானல்தான், அவர்களால் எதையும் வாங்கமுடியும். வாங்குவதற்கு மக்கள் இருந்தால்தான், தொழில்முறை வளர்ச்சியால் பண்டங்கள் அதிகமாக உற்பத்தியாவதற்குப் பலன் இருக்கும். ஆகத் தொழில்வளர்ச்சித்திட்டங்களுடன், மக்களின் வாங்கக் கூடிய சக்தியையும் அதிகமாக்க வேண்டும். திட்டங்களுக்காக பணத்தைப் போடும் பொழுது ஒவ்வொரு பகுதியின் தொழில் வளர்ச்சியையும் வருமானத்தையும் மற்ற பகுதிகளுடன் ஒத்த தன்மையில் உயர்த்திக் கொண்டுபோக வேண்டும். அப்படியின்றி ஒரு பகுதியில் மட்டும் வருமானத்தை உயர்த்தும் விதத்தில் திட்டங்களைப் போட்டால், அது மற்ற பகுதிகளுக்குக் கேடு விளைவிக்கும். ஒரு பகுதியில் மட்டும், பணம் குவிவதால், பணவீக்கம் ஏற்பட்டு அதனல் அந்தப் பகுதியில் பணத்தின் மதிப்பு குறைந்து மற்ற பகுதிகளுக்கும அது பரவுகிறது. ஒரு பகுதியில் மட்டும் வருமானம் பெருகியது தான், இந்தியப் பொருளாதாரத்தில் பணவீக்கம் ஏற்படுவதற்கு முக்கிய காரணமாயிருக்கிறது, பணவீக்கத்தால், உணவு நெருக்கடி நிலைமை உண்டாகியிருக்கிறது.

ஐந்தாண்டுத் திட்டத்தின் மூலம், பட்டாளத்திற்கு ஒதுக்கப்படும் செலவுகளாலும், அரசாங்கத்தின் வரிப் பணத்தில் பெரும் பகுதி வட இந்தியாவில் செலவழிக்கப்படுகிறது. பணவீக்கத்திற்கு இது முதல் காரணமாயிருக்கிறது.

அரசாங்கத்தின் திட்டங்கள் இன்னும் பரவிய முறையில், எல்லா மாநிலங்களுக்கும் சமமான வகையில் போடப்பட்டிருந்தால், பற்றுக்குறை நிதித் திட்டங்கள் (அதாவது வரவுக்கு மேலாகச் செல விட்டு, போதாத பணத்திற்கு காகித நோட்டடித்தல் முறை) இன்னும் அதிகமாகப் போட்டால் நாடு தாங்கியிருக்கும். வட இந்தியாவில் பணம் அதிகமாகக் குவிகின்ற காரணத்தால், உணவுத் தானியங்களையும் மற்ற சாமான்களை அதிக விலை கொடுத்து வாங்க அவர்கள் தயாராக இருக்கிருர்கள். அதனுல் விலை வாசிகள் உயருகின்றன. அங்கு உண்டாகிற விலை வாசி உயர்வு இந்தியா முழுவதும் பரவி மற்ற மாநிலங்களுக்குத் துன்பம் விளைவிக்கிறது. இவ்வாறு வட இந்தியாவில் பணம் பெருக்கம் ஏற்பட்டு விலைவாசி உயராவிட்டால், ஆந்திராவில் உள்ள நெல் வியாபாரிகள் தென்னுட்டிலுள்ள மற்ற மாநிலங்களில் விற்காமல், பம்பாய்க்கு நெல்லை அனுப்புவதில் மும்முரமாக ஏன் இருக்கவேண்டும்?

வட இந்தியாவில் மட்டும் பணப்பெருக்கம் ஏற்பட்டால், தென்னிந்தியாவில் உள்ளவர்கள் அதன் பலனை அனுபவிக்கிருர்கள். அங்கு ஏற்பட்ட பணப்பெருக்கத்தின் கேடுகள் இங்குள்ள மக்களை வாட்டுகிறது. ஏனென்ருல் வட இந்தியாவில் பெருகிய வருமானத்தை ஒத்து, தென்னிந்தியாவில் வருமானம் உயரவில்லை. அதற்கு உதாரணமாகக் கேரளாவைப் பார்க்கலாம். கேரளாவில் 1951லிருந்து வருமானம் குறைந்து பணப் புழக்கம் குறைந்து, பொருளாதாரம் மெலிந்து வந்தது. கேரளாவில் சரிந்துவரும் பொருளாதார நிலைமை வெளியில் தெரியாமலிருந்தது. ஏனென்ருல் மத்திய அரசாங்கம் தருகிற புள்ளி விவரங்கள் இந்தியா முழுமைக்கும் ஒன்று சேர்த்துத் தரப்படுவதால், ஒரு மாநிலத்தில் ஏற்படுகிற ஏற்றத் தாழ்வுகளைத் தனியாக கண்டு பிடிக்க முடியவில்லை. அமெரிக்க ஐக்கிய நாடுகளில் 48 மாநிலங்கள் சேர்ந்துள்ளன. இந்தியாவிலுள்ள ஒரு மாவட்டத்திலிருக்கும் மக்கள் தொகையைவிடக் குறைவான மக்கள், பல அமெரிக்க மாநிலங்களில் இருக்கிருர்கள். இருந்தாலும், அமெரிக்காவில் ஒவ்வொரு மாநிலத்தின் உற்பத்தி, வருமானம், வாழ்க்கைநிலை முதலிய எல்லாப் புள்ளிவிவரங்களாலும் மாநிலத்துக்குத் தனியாக சேகரிக்கப்பட்டு, வெளியிடப்படுகின்றன. அந்தப் புள்ளிவிவரங்களை வைத்து மாநிலங்களின் வரவுசெலவுத்திட்டத்தை ஆராய்ந்து போடுகிருர்கள். ஆனல் இந்தியாவில் இன்னும் "அகில இந்தியா" என்று இந்தியா முழுமைக்கும் உள்ள புள்ளி விவரங்களைப் பார்ப்பதுடன் திருப்தியடைந்துவிடும்.

இந்தியா ஒரு பெரிய துணைக் கண்டம். ஐரோப்பாகண்டத்திலிருப்பதைவிட, அமெரிக்கா கண்டத்திருப்பதைவிட, அதிகமான வேற்றுமைகள் இங்கு இருக்கின்றன.

இந்தப் பிரச்சினைகளை மத்திய அரசாங்கமும் திட்டக்குழுவும் அதிகமாகக் கவனிக்க வேண்டும். அவைகளைச் சார்ந்த பொறுப்புகள் அவை. ஆனல் திட்டங்கள் விரைவாகவும் நியாயமாகவும் கிடைக்க வேண்டுமானல், நியாயமானப் பங்கைப் பெறவேண்டிய பகுதி மத்திய அரசாங்கத்திடம் அதிகப்பங்கு கோரி வலியுறுத்த வேண்டும். முதலாவதாக, அகில இந்தியா புள்ளிவிவரங்களை மாநில வாரியாகப் பிரித்துத்தரவேண்டும். அதற்குப் பின் பாதுகாப்பு முதலியவைகளுக்குக் குறைவாராதவகையில், மத்திய அரசாங்கம் செலவிடும் தொகையை எல்லாப் பகுதிகளுக்கும் நியாயமான தேவையான முறையில் பிரித்துக் கொடுக்கலாம்.

மாநிலங்களுக்குத் தனியாகப் புள்ளிவிவரங்கள் சரியாக வேண்டும். செலவுத் திட்ட விவாதத்தின் போது சென்னை மாநில நிதி மந்திரி அவர்கள் கேரளாவின் சராசரிவருமானம் பற்றியும், சென்னை மாநிலத்தின் சரியான வருமானம் பற்றியும் சில புள்ளி விவரங்களைத் தந்தார். அவை சரியானவையல்ல என நினைக்கிறேன். ஏதோ தவருன ஆதாரங்களின் மீது அவைகளை எடுத்திருக்க வேண்டும். தென்னுட்டின் மாநிலங்கள் சேர்ந்து குழு மாநிலங்களுக்குத் தனிப்பட்ட புள்ளி விவரங்களைப் பெற முயல வேண்டும்."

"மானிடர் குடும்பம்" புகைப்படக் கண்காட்சியில்:

சிறுவனும் மேதையும்





முதல் படத்தில் சிறுவன் கணக்குப் போடுகிருன். இரண்டாவது படத்தில் விஞ்ஞான மேதை ஐன்சுடைன் யோசித்தபடி நிற்கிருர். 2+1=3 என்று முதலில் சிறுவன் போடுகிருன். இரண்டாவதாக 1+2=3 என்று போடுகிருன். இரண்டுடன் ஒன்றைக் கூட்டினுலும், ஒன்றுடன் இரண்டைக் கூட்டினுலும், இரண்டு வழிகளிலும் ஒரேவித விடை வருவது கண்டு சிறுவன் திருப்தியடைகிருன். ஆனல் ஐன்சுடைனுக்கு அது திருப்தியளிக்கவில்லை. எல்லா சமயங்களிலும் அது சரியாகுமா என்ற யோசனை தோன்றுகிறது.

குழலோசை!

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வெவ்வேறு மக்களை சந்திக்கிறோம், வெவ்வேறு தொழில்கள், உடைகள், கோலங்கள், மனப்போக்குகள் வருகின்றன. மற்ற எல்லா வகைகளிலும் வேறுபாடுகள் காணப்பட்டபோதிலும், மனித குலமென்னும் குடும்பத்தில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு உறுப்பினராக-அதாவது "மனிதரில் ஒரு மனிதனாக" வந்து போகிறார்கள். மனிதனின் வாழ்வு-மனிதத் தன்மை பொருந்திய வாழ்வு நிழற்படக் காட்சி போலப் போகிறது, நிழற்படக் காட்சியில், நாம் அமர்ந்திருப்போம். படச்சுருள் போய்க்கொண்டிருக்கும்; இங்கு படங்கள் இருந்த இடத்தில் இருக்கின்றன, நாம் போய்க்கொண்டிருக்க வேண்டும். ஆனால் நிழற்படக் காட்சியில் வருவது போன்ற தொடர்பு-அங்கம்-காட்சி-கதை இந்தப் படங்கள் தருகின்றன.

மனித வாழ்வின் கதை புகைப்படங்களின் மூலம் தரப்படுகிறது. அவர்கள் மனிதர்கள்-மனித குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்பதைத் தவிரப் படங்களில் இருக்கும் பலர் இதற்குமுன் ஊர் பேர் தெரியாதவர்களாயிருப்பார்கள். தனிப்பட்ட முறையில் உயர்ந்தவர்களாயிருப்பவர்-அதாவது மேதைகள் புகழ் பெற்றவர்கள் என்ற வகையில் ஓரிரு படங்கள் தவிர மற்ற வகைகளில் இருப்பவர்கள் அனைவரும் சாதாரண மக்கள்! புகைப் படங்கள் சிறந்தவைகளாக இருந்த போதிலும் புகைப்பட மெடுக்கும் திறமையைவிளக்க எடுக்கப்பட்டவைகளாகத் தோன்றவில்லை. அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு மனிதப் பண்பை விளக்க உதவும் வகையில் எடுக்கப் பட்டுள்ளன.

மனிதகுலமனைத்தும் மாண்பு மிகு ஓர் குடும்பம் என்பதை உணர்த்த அந்தப் படங்கள் உதவுகின்றன!

சண்டை சச்சரவு அற்ற இடத்தில்- அணுச் சஞ்சலமேனும் அணுகாத இடத்தில் கண்ணோடு கண்பேச காதலிசை பருகும் காதலர்கள்,

பத்து மாதம் சுமந்து எதிர் பார்த்திருக்கும் தாய்மைப் பருவம்,

தனது வரவைத் தானே அறிவித்துக்கொண்டு வரும் இளம் சேய்,

பிள்ளைக் கனியமுதைப் பார்த்துப் பார்த்துப் பரவசமடையும் தாய்,

தாவி விழுந்து தளர்நடை பயின்று குதித்து விளையாடி குடும்பத்தைக் குதூகலம் செய்யும் குழந்தைப் பருவம்,

தாயின் அணைப்பைவிட்டு, தந்தையின் வேலையைக் கவனிக்கும் பையன்,

குடும்பம் வளர்கிறது, குடும்பத்தார்கள் பாடுபடுகிறார்கள், மலைச்சரிவில் ஆற்றோரத்தில், மண்பரந்த இடத்திலெல்லாம் குடும்பத் தலைவனின் கண்கள் வயல்களைக் காண்கின்றன. மண் சேறாகிறது, சேற்றில் செந்நெல் கதிர்கள் வளர்கின்றன, வீட்டில் உணவு நிறைகிறது.

உழவுடன் தொழிலும்-வலிய கரங்கள் அசைக்கின்றன, மண் இரும்பாகிறது, மலைச்சரிவு பாதையாகிறது, ஆறு நிற்கிறது, அலையும் அடங்குகிறது.

உணவு-உண்கிறார்கள், ஒருவராக, இருவராக, குடும்பத்தார்கள் அனைவருமாக, கூட்டமாக! கோதுமை ரொட்டி, கொழுத்தகிடா, பழம், முட்டை தேநீர், இளநீர்-மண்ணில் இருப்பது, இவன்கையில் கிடைப்பது உணவாகிறது.

உணவருந்தியதும் உல்லாசம், விளையாட்டு-சிறுவர்கள் சிறுமிகள் கைகோர்த்து ஆடுகிறார்கள், கண் மூடிப் பிடிக்கிறார்கள், கைகொட்டிச் சிரிக்கிறார்கள்.

செங்கதிர் தாழ்கிறது. சிறு பறவைகள் வட்ட மிட்டு வருகின்றன. மாலை வெய்யலில் குடும்பங்கள் இளைப்பாறுகின்றன.

ஓய்வு நேரத்தில் இசை-குழல் ஊதுகிறது; நரம்புகள் அசைகின்றன. சிறுமியர் பாடுகின்றனர், மூதாட்டியர் சீட்டாடுகின்றனர், மண்டபங்களில் வல்லுநர்கள் இசை வெள்ளத்தை அவிழ்த்து விடுகின்றனர், எங்கும் இன்ப மயம், ஆடல் பாடல், கதை பேச்சு, கூத்து, வேடிக்கை!

கல்வி—சிலர் கேட்கிறார்கள் சிலர் படிக்கிறார்கள், சிலர் எழுதுகிறார்கள், சிலர் இடது பக்கத்திலிருந்து வலதுபக்கம் எழுதுகிறார்கள், சிலர் வலது பக்கத்திலிருந்து இடதுபக்கம் எழுதுகிறார்கள் - இவைகளெல்லாம் அறிவைப்பெற-உண்மையைக்காண. சிறுவர்கள் கணக்கும் போடுகிறார்கள். மேதைகளும் அதே எண்களை வைத்துக் கணக்குகள் போடுகிறார்கள்.

வாழ்வில் சிறுசிறு பிணக்குகள், ஊடல்கள்-அவை தீர்ந்து மீண்டும் குதூகலம், மகிழ்ச்சி!

சிலசமயங்களில் சாவு குடும்பத்தில்ஒருவரை அழைத்துச் சென்றுவிடுகிறது, துக்கம், அழுகை, குடும்பத்தில் சோகம் சூழ்கிறது. ஆறுதல் வருகிறது சுற்றத்தார், நண்பர்கள் தேற்றுகின்றனர்.

ஏழ்மை, பசி-ஏக்கம் நிறைந்த பார்வை. மனிதத்தன்மை பசியுடன் போராடுகிறது.

மற்றவர்களுடைய அன்பு, ஆதரவு, பாசம், நேசம் கிடைக்கிறது. மனிதன் மனிதர்களைச் சந்திக்கிறான்.

மனிதர் மனிதர்களை அடிமைப்படுத்த, அடக்கி விட, நிற பேதத்தைக் காட்டிப் பிரித்து வைக்க முயலுகிறார்கள், அடங்க மறுத்து மனிதர்கள் போராடுகிறார்கள், பேசுகிறார்கள், கிளர்ச்சி செய்கிறார்கள்.

சண்டைகள் நீங்கி சமாதானத்துடன் வாழ முடியாதா? ஐக்கிய நாடுகள் சபை உண்டாகிறது.

கொந்தளிப்பின் மத்தியில் நம்பிக்கை தோன்றுகிறது.

மனித குடும்பத்தில் குழந்தைகள் வளர்ந்து வருகின்றன அவர்கள் புது உலகிற்குள்- சண்டை சச்சரவு அற்ற, சூதும் வாதும் இல்லாத புது உலகிற்குள் நுழைகின்றன!

இது வரை சொன்ன கதை "மானிடர் குடும்பம்" என்ற கண்காட்சியில் படங்களின் மூலம் காட்டப் படுகிறது.

படங்கள் பேசுகின்றன, மனித குடும்பத்தின் கதை-சம்பவங்கள் நிறைந்த வாழ்க்கைக் கதை சொல்லப்படுகிறது.

மொத்தம் 68 நாடுகளைச் சேர்ந்தவர்களின் பழக்க வழக்கங்களைச் சித்தரிக்கும் 503 புகைப்படங்கள் இந்தக் கண்காட்சியில் வைக்கப்பட்டுள்ளன. இதுவரை பல நாடுகளில்காட்டப்பட்டு, பல லட்சக் கணக்கானவர்கள் கண்டுகளித்திருக்கிறார்கள். இந்தியாவில் வந்ததிலிருந்து பத்து லட்சம் பேர்களுக்குமேல் படக் கண்காட்சியைப் பார்த்திருக்கிறார்கள். சென்னையில் பார்த்தவர்கள் தொகை 2லட்சத்துக்கு மேலிருக்கும்.

கண்காட்சியை முதலில் ஆரம்பிக்கும்பொழுது, இது மாதிரி உலகநாடுகளைச் சுற்றி அனுப்பவேண்டியிருக்கும். என்று அவர்கள் எதிர் பார்க்கவில்லை. சேகரிக்கப்பட்டப் படங்களைத் தொகுத்து "மியூசியம்" போன்ற ஒரு தனிப்பட்ட அமைப்பு வைப்பது என நினைத்து ஆரம்பித்தார்கள். ஒருமுறை அமெரிக்கக் குடியரசுத் தலைவர் அந்தப் படங்களைப் பார்த்தாராம். பார்த்ததும் "இவ்வளவு நல்ல கருத்துக்களடங்கிய படங்களை நாம் மட்டும் பார்த்து மகிழ்ச்சியடைந்து கொண்டிருப்பதைவிட, மற்றவர்களும் பார்க்கும் படி செய்யலாம்!" என்று கூறினாராம். அதிலிருந்து நியுயார்க் நகரிலிருந்து அமெரிக்க கண்டத்தில் பல இடங்களுக்கும் எடுத்துச் செல்லப்பட்டு, வேறு கண்டங்களுக்கும் எடுத்துக்கொண்டு வரப்பட்டது.

தற்பொழுது சென்னையில் நடைபெறும் கண்காட்சி, ஜுலை 21ந்தேதிவரை இருக்குமென்று தெரிகிறது. அதற்கு மேல், கண்காட்சி வேறு இடங்களுக்கு எடுத்துச் செல்லப்படுமெனத் தெரிகிறது. நல்ல புகைப்படங்கள் என்பதற்காக அல்லாவிட்டாலும், உலகமக்களிடை நேசத்தையும் ஒற்றுமையையும் வளர்க்க, இத்தகைய முயற்சிகள் பலன்தரும் எனக் கூறலாம். மிகப்பெரிய பிரச்சினையைத் தீர்க்கச் சிறிய முயற்சி என்றபோதிலும், சிறு துளி பெருவெள்ளமாவது போல, சிறுசிறு முயற்சிகள் பெரும் பலனைத் தரக்கூடும். அந்த வகையில் இத்தகைய முயற்சிகள் வரவேற்கத் தக்கவை!

—இரா. செ

(அடுத்த இதழில் கண்காட்சியில் இருந்த வேறு சில படங்களும் குறிப்புகளும் வெளிவரும்.)

படித்தவர்களிடை வேலையில்லாத் திண்டாட்டம் தென்னாட்டில் அதிகமாக இருக்கிறது. குறிப்பாகக் கேரளாவில் அது அதிகரித்திருப்பதை நன்கு காணலாம். உபயோகிக்கப்படாத வளங்களும் உபயோகப் படுத்தாத (வேலையற்ற) கரங்களும் இருக்கிற இடத்தில் தான் நல்ல திட்டங்களுக்கு முதல் தரவேண்டும். ஜனநாயகமென்றால் வெறும் சடங்குகளையும் கொண்டதல்ல. ஆயிரக்கணக்கான இளைஞர்கள் வேலையில்லாதிருந்த காரணத்தால் தான், கம்யூனிசுட்கள் பக்கத்திலும் தீவிரவாதிகள் பக்கத்திலும் அதிகப் பேர் சேர்ந்தார்கள்.

மத்திய அரசாங்கம் உதவி தராவிட்டாலும், தென்னிந்திய மாநிலக் குழுவினர் தொழில் திட்டங்களைத் தயாரித்து, தனிப்பட்டவர்களை வைத்தாவது வளர்த்து, பின் மத்திய அரசாங்கத்தினிடம் மான்யங்களை வாங்கப் பாடுபட வேண்டும்.

தென்னாட்டிற்கு அதிகமான திட்டங்கள் வேண்டுமென்பது நியாயமானது மட்டுமல்ல, மிக மிகத் தேவையானதும்கூட! இதில் தென்னாட்டு மக்கள் தங்கள் கடமையை உணர்ந்து பணியாற்றவேண்டும். அரசியலில் கலக்காதவர்களும், அரசியலுக்கு அப்பாற்பட்டவர்களும் ஒரு அமைப்பை உண்டாக்கி, மக்களின் விருப்பங்களையும் தேவைகளையும் கண்டறிந்து, அவற்றை வலியுறுத்துவதில் உறுதியாக இருக்க வேண்டும். ○

திருத்தம்.

14-7-57 "மன்றம்" இதழில் 11-ம் பக்கம் 3வது காலத்தின் ஆரம்பத்தில் "பிரபுக்கள் ஆடுகிறார்கள், குருமார்கள் பாடுகிறார்கள் ஏழைகள் வரிசெலுத்துகிறார்கள்" என்பதற்குப் பின் தரப்பட்டுள்ள ஆங்கிலம் வாக்கியம் பின் வருமாறு திருத்தப்பட வேண்டும்,

"The rich play, the priests pray, the poor pay"

"மன்றம்" அச்சகத்தில் (26, நைனியப்பன் தெரு, மண்ணடி சென்னை-1. தமிழ்நாடு) ஆசிரியர், இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. உதவி ஆசிரியர்: இரா. செழியன் எம். ஏ. —(தொலை பேசி எண்: 5569